

ஈழச்சுடர்.
ஆனி, ஆடி 1965
EELACHUDAR
30 சதம்

# S-lon

now a household word in all domestic water service installations



*FOR FULL PARTICULARS APPLY TO*

**Rajandrams Ltd.,**

MAHARAJA BUILDING

**BANKSHALL ST., COLOMBO 11.**

Phone: 3603, 3634

தெணியான்


# பீடி புகைப்போருக்கு ஒரு அரிய வாய்ப்பு

குணம், மணம், நிறைந்தது

## ஸ்பெசல் யானை பீடி

ஒன்றே

இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும்
தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக்கொண்டதும்

## ஸ்பெசல் யானை பீடி

ஒன்றே

உள்நாட்டு கைத்தொழிலுக்கு ஊக்கமும்
ஆதரவும் அளியுங்கள்

தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்:

# யானை பீடிக்கம்பெனி

62, மெசஞ்சர் வீதி,

கொழும்பு-12.

தொலைபேசி: 7651

பரீட்சித்துப் பாருங்கள்

# அசோக

மருந்துப் பொருட்கள் கலக்கப்பட்ட

## பற்பொடி

அரிய சேர்மானப் பொருட்கள் கொண்டதாக அதிசயக்கத்தக்க ரீதியில் தயாரிக்கப்பட்ட அசோக பற்பொடி பல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களையும் அகற்றுகிறது. பயோரியா, முரசு கரைதல், பல் சொத்தை, வாயிலிருந்து துர்நாற்றம் வீசுதல் மற்றும் உஷ்ண பிரதேஷங்களில் ஏற்படக்கூடிய பல் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களுக்கும் சிறந்தது.

ஒரு முறை பரீட்சித்துப் பார்த்தீர்களானால்
அதன் பலனை உணர்வீர்கள்.

இலங்கை அடங்கிலும் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள்:-

## துரை அருள் & கம். லிமிட்.,

93, கெய்ஸர் வீதி, கொழும்பு-11.
போன்: 4588

உபவிநியோகஸ்தர்களாகவும், ஏஜெண்டுகளாகவும் நியமனம் பெற தயவு செய்து விண்ணப்பிக்கவும்.

சிக்கனத்திற்கும் மணத்திற்கும் சுவைக்கும்

சிறந்த தேயிலை

# லிப்டன் லாவோஜி

இன்றே வாங்கி அருந்துங்கள்

விசுவாவசு வருஷம் 1965
ஆனி ஆடி — ஜூன் ஜூலை
சுடர் 2 — ஒளி 2

# ஈழச் சுடர்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்"

**பு**த்தாண்டு மலரினைப் பாராட்டிப் பல வாசகர்கள் எமக்கெழுதியுள்ளனர். அவர்களெல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அறிவுக் களஞ்சியம் பரிசுப் போட்டிக்கு நூற்றுக்கணக்கான விடைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் அதிக சரியான விடைகளையனுப்பிய, உரும்பராயைச் சேர்ந்த மாணவிக்கு முதலாவது பரிசும், பல்கலைக் கழகப் பட்டதாரி மாணவனுக்கு இரண்டாவது பரிசும் வழங்கப்பட்டுள்ளன. இப்போட்டி வினாக்களின் தரம் மிகவும் உயர்ந்துவிட்டதாகப் பலர் கூறியதன் பயனாக இம்முறை தரத்தினைக் குறைத்துள்ளோம். ஆயிரக்கணக்கான வாசகர்கள் அடுத்தமுறை பங்குபற்றுவார்களென எதிர்பார்க்கின்றோம்.

காங்கேசன்துறை, துறைமுக அபிவிருத்தி, ஈழநாட்டு, குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசப் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும். பல வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்ட இத்திட்டம் விரைவில் அமுலாக்கப்படவிருப்பது வரவேற்கத் தக்கது. நம் நாட்டுப் பொருளியல் அறிஞர் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கி எழுதியுள்ள கட்டுரை இவ்வேட்டில் வெளிவருகின்றது.

இந்த இதழில் நீர்ப்பாசன இலாக்கா உதவி அதிகாரி ச. ஆறுமுகம் அவர்கள் யாழ்ப்பாணம் பாலைநிலமாகாது தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறியுள்ளார். அவரது கட்டுரை தமிழ் மக்களுக்கு மிகவும் பயனுடையதாக விளங்குமென எதிர்பார்க்கின்றோம்.

நம நாட்டு, இலங்கை வங்கிப் பொது நிர்வாகி, சி லோகநாதன் அவர்கள் ஆசிய நாடுகள் சனநாயக அமைப்பினுள்ளே விரைவான பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்த ஒரு திட்டத்தினை வரைந்துள்ளார். இவ் அபிவிருத்திச் சேமிப்பு வங்கித் திட்டம் பல பொருளியல் நிபுணர்களது பாராட்டினைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களை விளக்கும் சி. லோகநாதன் அவர்களது கட்டுரையும் இவ் மலரினை அலங்கரிக்கின்றது.

ஈழநாட்டு அற்புத ஆலயங்கள் எனும் தொடரில், சகல மதத்தினரும் யாத்திரை செய்யும் அற்புத மடுமாதா ஆலய வரலாற்றினைக் கூறும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் ம. பத்திநாதன் அவர்களது கட்டுரையும் இவ்வேட்டில் இடம்பெற்றுள்ளது.

புகழ்பெற்ற சிறுகதை எழுத்தாளர் செ. யோகநாதன், குந்தவை, பெனடிக்ற் பாலன் ஆகியோரது படைப்புகளும் இவ்விதழில் மலர்கின்றன.

ஆ—ர்.

# அறிவுக் களஞ்சியம்

யசோதன்

இப் போட்டியை தொடங்கும்போது இத்தகைய அமோக வரவேற்பு கிடைக்கும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான நேயர்கள் மிக்க ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை அனுப்பியிருந்தார்கள். முடிவு திகதியாகிய 15-5-65ம் அதற்கடுத்த இரு தினங்களும் விடுமுறை நாட்களாக இருந்தமையினால், 20-ம் தேதிவரை கிடைக்கப்பெற்ற விடைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டோம். மொத்தமாக 167 விடைகள் கிடைக்கப்பெற்றன. ஆயினும் ஒருவராவது பத்துக் கேள்விகளுக்கும் சரியான விடைகள் எழுதவில்லை. எட்டாவது கேள்விக்கு இருவரைத் தவிர வேறெவரும் சரியான விடை எழுதவில்லை. அநேக நேயர்களை முதலாம், மூன்றும், எட்டாம், ஒன்பதாம் கேள்விகள் திக்குமுக்காடச் செய்துவிட்டன என்பது அவர்களுடைய விடைகளால் தெரிய வருகின்றது.

பல நேயர்கள் மிகவும் பாராட்டி எழுதியுள்ளார்கள். கேள்விகள் மிகவும் கடுமையானவை எனச் சிலரும், பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ள இக்கேள்விகளுக்கு விடைகள் தேடுவதில் இன்னும் புத்தம் புதிய அறிவையும் தெளிவையும் அடைய முடிகிறது என பலரும் எழுதியுள்ளார்கள். போட்டியில் கலந்துகொண்ட நேயர்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றி. மேலும் மேலும் நேயர்கள் இப்போட்டியில் ஆர்வமுடன் பங்குபற்றி அறிவை வளர்ப்பார்களென நம்புகின்றோம்.

அறிவுக் களஞ்சியம் இலக்கம் ஒன்றின் விடைகள் பின்வருமாறு:

1. சிலப்பதிகாரம்; இளங்கோவடிகள் ('கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்' என்னும் அடியில்)
2. மலேயா, சிங்கப்பூர், வடபோர்ணியோ, சாரவாக் நாடுகள்.
3. ஸ்ரீதியாகராஜர், முத்துசாமி திஷிதர், சியாமா சாஸ்திரிகள்.
4. கஸ்தூரி மான் (Musk Deer)
5. கல்கியின் 'அலையோசை'
6. நேரம் (Time)

7. செண்பகப்பெருமாள். இவன் ஆறும் பராக்கிரமபாகுவினுல் யாழ்ப்பாணத்தை அரசுசெய்ய அனுப்பப்பட்டான். ஆறும் பராக்கிரமபாகுவின் பின் ஆறும் புவனேகபாகு என்னும் பெயருடன் கோட்டையிலிருந்து அரசுபுரிந்தான்.

8. ஆம்; கால்வாய்த் தீவுகள் (Channel Islands) இவை 1940ல் இருந்து 1945 வரை ஜெர்மனியர்வசம் இருந்தன.

9. புதன்; சூரியனுக்கு மிக அருகாமையில் இருப்பதாலும், எப்போதும் ஒருபக்கமே சூரியனை நோக்கி இருப்பதாலும் அப்பகுதி மிகவும் சூடாகவும், மறுபக்கம் மிகவும் குளிராகவும் இருக்கும்.

10. ஸ்ரீஜவகர்லால் நேரு.

நிமலன் அரவிந்தன் அரவிந்தன்

| முதலாம் பரிசாக ரூபா 15/-ஐப் பெறுபவர் | இரண்டாம் பரிசாக ரூபா 10/-ஐப் பெறுபவர் |
|---|---|
| 1. ராதா நவரத்தினம்<br>உரும்பிராய் தெற்கு<br>உரும்பிராய் | 2. மா. நடேசலிங்கம்<br>224, இராஜ வத்த<br>பேராதனை |

அறிவுக் களஞ்சியம் 2க்குரிய கேள்விகள் பின்வருமாறு:

1. புத்தபகவான் இலங்கைக்கு மூன்று தடவைகள் விஜயஞ்செய்ததாக மகாவம்சம், தீபவம்சம் என்னும் நூல்கள் கூறுகின்றன. அவர் வருகை தந்த இடங்கள் எவை?

2. கீழைத்தேசத்திலுள்ள இரு பொதுநலவரசு நாடுகள் (Commonwealth nations) ஒரே தேசிய தினத்தைக் கொண்டாடுகின்றன. அந்நாடுகள் எவை? அந்தத் தேசிய தினம் எது?

3. 'கவிச்சக்கரவர்த்தி' எனப் பட்டம் பெற்ற தமிழ்ப்புலவரில் கம்பரும் ஒருவர். மற்ற இருவரும் யாவர்?

4. செங்குத்தாக நேரே மேலெழும்பிப் பறக்கவும் அதேபோல் கிழிறங்கவும், பக்கமாகவும், பின்புறமாகவும் பறக்கக்கூடிய ஒரே பறவை எது?

5. 'ஹிஜ்ரா' (Hijra) என்பது என்ன?

6. நோபல் பரிசு பெற்ற ஒரேயொரு இந்திய விஞ்ஞானி யார்?

7. திருக்கோணமலையில் உள்ள கோணேசர் ஆலயத்தைக் கட்டிய மன்னன் யார்?

8. கடல் மார்க்கமாக உலகத்தை முதன்முதலாக வலம் வந்த மாலுமி யார்?

9. ரோமன் எண் வரிசையில் உள்ள எல்லா எழுத்துக்களேயும் ஒரு முறை பாவித்துப் பெறக்கூடிய ஆகக்கூடிய தானம் எது?

10. ''நன்மை செய்யப் பிறந்த நீ, நன்மை செய்யாவிடினும் தீமை யாவது செய்யாமலிரு; அதுவே நீ செய்யும் அரும்பெரும் நன்மையாகும்'' — இது யாருடைய வாசகம்?

## போட்டி விதிகள்:

1. இப்போட்டிக்குப் பிரவேசக் கட்டணமெதுவுமில்லை. விடைகளுடன் இப்பக்கத்தில் பிரசுரிக்கப்படும் கூப்பனையும் இணைத்து அனுப்பவேண்டும். ஒருவர் ஒரு உறைக்குள் கூப்பன்கள் இணைக்கப்பட்டுள்ள எத்தனை விடைகளையும் அனுப்பலாம்.

2. விடைகளையும் விலாசத்தையும் மையினால் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். தெளிவற்ற விடைகள் நிராகரிக்கப்படும்.

3. முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் சரியான இரு விடைகட்கு முதலாம் இரண்டாம் பரிசுகளாக முறையே ரூபா 15/- ரூபா 10/- அளிக்கப்படும். முழுவதற்கும் சரியான விடைகள் கிடைக்காவிட்டால் ஆகக்கூடிய சரியான விடைகள் அனுப்பியவர்களுக்கு திருவுளச்சீட்டின் பிரகாரம் பரிசுகள் அளிக்கப்படும்.

4. விடைகளை வருகிற மாதம் 15-ம் திகதி(15-8-65)யன்று நண்பகல் 12 மணிக்கு முன்னதாகக் கிடைக்கக்கூடிய வகையில் 'ஆசிரியர், ஈழச்சுடர், 13C, எதிர்வீர அவெனியு, தெஹிவலை' என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். விடைகள் அனுப்பும் உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'அறிவுக் களஞ்சியம்' என எழுதி அதன் இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

5. 'ஈழச்சுடர்' பத்திரிகையில் பணி புரிவோர் இப்போட்டியிற் கலந்துகொள்ள முடியாது.

— இங்கே வெட்டுக —

அறிவுக் களஞ்சியம்

இல. 2

பெயர்:..............................

விலாசம்:..............................

..............................

உருவகக் கதை:

# ஒன்றே ஒன்று!

[பெனடிக்ட்பாலன்]

ஒரு குச்சு வீட்டில் அழுகையும், கூக்குரலும், துடிதுடிப்பும் குமைந்து எழுந்தன. மனிதர் கூட்டம் அவ் வீட்டை நோக்கித் துக்கத்துடன் விரைந்து கொண்டிருந்தது.

அவ்வீட்டில் ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து கிடந்தான். சூரியன் மங்கலடைந்துவிட்டது. காற்றுப் பலமாக வீசிற்று. வீட்டில் அருகில் நின்ற மரத்தின் கொப்பு முறிந்து விழுந்தது. இயம தூதுவர்கள் அந்த உடற் கூட்டில் இருந்த உயிரை கயிற்றால் கட்டிக் கொண்டு தம் உலகம் சென்றுவிட்டார்கள்.

"மிக மிக உலகப்பற்றுள்ள உயிர் இது. நாம் களைத்துவிட்டோம்!" தூதுவர்கள், அந்த உயிரை இயமதேவன் முன் கொண்டு வந்து போட்டனர்.

அது, தன்னைக்கட்டிய கயிற்றை அறுக்கத் துடித்துக்கொண்டிருந்தது. இயமதேவன் தன் ஆசனத்தில் இருந்தவாறு, பயங்கர விழிகளை உருட்டி அவ்வுயிரை நோக்கினார்.

"கட்டை அவிழுங்கள்!"

இயமதூதுவர் அவிழ்த்துவிட்டதும், அவன் எழுந்து நின்றான்.

இயமதேவன், உயிர்களின் காலம் எழுதிவைக்கும், கணக்காளரை நோக்கினார்.

"இவன் முடிவு என்ன?"

"இவன் ஒரு தீங்கும் யாருக்கும் செய்யவில்லை. மிக கொடுமையான வறுமையை அனுபவித்தான்."

கணக்காளர் கூறியதைக் கேட்ட இயமதேவன் தன் மீசையை முறுக்கிவிட்டுச் சிரித்தார். அவனை அன்போடு நோக்கினார்.

"நீ மோட்சத்துக்குப் போகலாம்!"

அதைக் கேட்டதும், இயம சபையில் வீற்றிருந்த அனைவரும் கை கொட்டி, ஆரவாரம் செய்து, அவனை வாழ்த்தி, அவனை நோக்கிச் சிரித்தனர்.

அவன் அழுதுகொண்டு நின்றான்.

இயமதேவன் திடுக்குற்றார். மோட்சம் செல்லும் ஒருவன் அழுகிறான். அவர் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"தவறு நேர்ந்துவிட்டது!"

கணக்காளர், கணக்குப்புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு தேவனை நோக்கினார்.

"இவன் காலம் இன்னும் முடியவில்லை. தூதுவர்கள் காலம் தவறிக்கொண்டு வந்துவிட்டார்கள்!"

இயமதேவன் கோபத்துடன் கணக்காளரை நோக்கினார்.

"இன்னும் எவ்வளவு காலம் உண்டு?"

"இரண்டே விநாடிகள்?"

"இவ்வளவுதானா? அது இங்கேயே முடியட்டும்"

# பலர் போற்றிடவெழுந்தான்!

(வ. கோவிந்தபிள்ளை)

விண்ணில் ஒளி விடுதாரகை
　　தமை வென்றிடு மதிபோல்
மண்ணில் அள விலதாயெழு
　　பலசஞ் சிகை களையும்
எண்ணில் இவை யொன்றாயினும்
　　இணையில் லையென் றெண்ணப்
பண்ணும் படி ஈழச்சுடர்
　　பலர்போற் றிட வெழுந்தான்!

பாட்டும் உயர் பண்பும்பல
　　கலைதேர்ந்த நல் லறிஞர்
காட்டும் அருங் கருத்துமுளங்
　　கவரும் பல சிறப்பும்
நாட்டும் தொடர் கதையும்சிறு
　　கதையும் எழிற் கவிதை
தீட்டியிரு திங்கள் தொறும்
　　எழுந்தான் புவி யேத்த!

இயமதேவன் கூறிவிட்டு, அவனை நோக்கினார்.

''என்னை அந்த இரு வினாடிகளும் உலகத்தில் விட்டுவிடுங்கள். அங்கு வாழ்ந்துவிட்டு வருகிறேன்.''

இயமதேவன் மௌனமாக இருந்தார்.

''அங்கு வாழ்ந்துவிட்டு வருகிறேன்!''

''அங்கு வாழ்ந்துவிட்டு வருகிறேன்!''

அவன் கத்திக்கொண்டு நின்றான்.

இயமதேவனுக்குப் பொறுக்க முடியவில்லை. சபை மௌனமாக இருந்தது.

''ஏன்?''

''ஏன்!''

இயமதேவனுடன் எல்லோரும் சேர்ந்து கேட்டார்கள். பதில் கிடைத்தது.

''அதுதான் மனிதனுடைய உலகம்!''

# யாழின் நன்னீர்

ச. ஆறுமுகம், B. Sc.; M. I. C. E.; M. I. W. E.
உதவி அதிகாரி, நீர்ப்பாசன இலாக்கா
[Deputy Director of Irrigation]



[குறிப்பு: கடந்த ஈழச் சுடர் இதழில் கலாநிதி W. L. ஜெயசிங்கம் அவர்கள் "யாழ்ப்பாணம் பாலைநிலமாகுமா" என்பது பற்றி ஆராய்ந்து இறுதியில் சமீபத்தில் தொடங்கப்பட்ட நுணுக்கமான அவதானிப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இக் கட்டுரையில் இவ்வவதானங்களும் அதோடு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளும் விவரிக்கப்படுகின்றன].

சமீபத்தில், நீரியல் நிபுணர் டாக்டர் ஆணன் ஆரட், புவிச்சரித அளவு இலாகாத் தலைவர் முதலியோர் அடங்கின நிபுணர்க்குழுவொன்று இஸ்ரேலிலிருந்து (Israel) இலங்கைக்கு விஜயம் செய்தது. இக் குழுவினர் இலங்கையில் வேறு விஷயங்களுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் வளத்தையும் கவனித்தார்கள். யாழ்ப்பாணத்தில் தரையின் கீழ் சேமிக்கப்படும் நீர், சேமிப்பிலும் பார்க்கக் கூடுதலாக வெளியே இறைக்கப்படுகின்றது. டாக்டர் ஆணன் ஆரட் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்கீழ் நன்னீர் கடல் நீர் மட்டத்திலிருந்து இரண்டு அடிகளுக்கு மட்டுமே காணப்படுகின்றதாகக் கூறினார்.

யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் நீர்ப்பிரச்சனையை நுணுக்கமாக ஆராயும் பொருட்டு 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் திகதியன்று இதனுடன் சம்பந்தப்பட்ட இலாகாகளிலிருந்து சிலரைக் கொண்ட ஆராய்ச்சிக்குழுவொன்று நிறுவப்பட்டது. இக் குழுவில் நீர் விநியோக வடிகாலமைப்பு இலாகா (Department of Water Supply & Drainage) புவிச்சரித அளவு இலாகா (Dept. of Geological Survey) வட இலங்கை விஞ்ஞான ஆசிரியர் சங்கம் (North Ceylon Science Teachers' Association), வடமாகாண விவசாய உற்பத்தியாளர் ஐக்கிய சங்கம் (Northern Division Agricultural Producers Co-operative Union Ltd) விவசாய ஆராய்ச்சியாளர் (Agricultural Research Officer) போன்ற ஸ்தாபனங்களிலிருந்து சிலரும் யாழப்பாணத்து அரசாங்க அதிபர், திரு. W. T. I. அழகரத்தினம் (G. O. D. B.) பேராசிரியர் K. குலரத்தினம் (இலங்கைப் பல்கலைக் கழகம்) ஆகியோருடன் திரு. ச. ஆறுமுகம் (உதவி அதிபர் நீர்ப்பாசன இலாகா) குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

விஞ்ஞான ரீதியில் கணிக்கப்பட்ட தகுந்த விபரங்களே இப்பிரச்சனையை ஆராய்வதற்குரிய அடிப்படைத் தேவையாகும்.

### விபரங்களைச் சேகரிக்க ஒழுங்குபண்ணல்

யாழ்ப்பாணத்தின் தரைக்கீழ் நீரியல் விபரங்களைச் சேகரிக்க 400 க்கு மேற்பட்ட கிணறுகள்

கண்காணிப்புக் கிணறுகளாக "Observation Wells" தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொரு கிராம சேவகர் பகுதியிலும் மூன்றிலிருந்து ஐந்துவரைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை கீழ்க்கண்டவாறு:

| | | |
|---|---|---|
| பச்சிலைப்பாலை | — 16 | கிணறுகள் |
| தென்மராட்சி | — 44 | ,, |
| வடமராட்சி | — 100 | ,, |
| கிழக்கு வலிகாமம் | - 40 | ,, |
| வட வலிகாமம் | — 100 | ,, |
| மேற்கு வலிகாமம் | - 36 | ,, |
| தீவுகள் | — 32 | ,, |
| யாழ்ப்பாணம் | — 36 | ,, |

பரவி யிருக்கின்றன.

கிராம சேவகர் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் கிணற்றின் மேல் களத்திலிருந்து நீரின் மேல் தளத்தின் உயரத்தை அளப்பர். அத்துடன் 1965-ம் ஆண்டு பங்குனி மாதம் முதற்திகதியிலிருந்து ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதியில் கிணற்றின் அடித்தளத்திலுள்ள நீரின் மாதிரியைப் பரிசோதனைக்கு எடுத்தனுப்புவர். இதற்கு மாகாண நீர்ப்பாசன எஞ்சினியர் (D. I. E.) ஒருவரால் தொடுக்கப்பட்ட தந்திரமான யந்திரம் உபயோகிக்கப்படுகின்றது. இக்கருவியின் உதவியால் எடுக்கப்பட்ட நீர் மாதிரிகள் ரசாயனப் பரீட்சையை மேற்கொண்டுள்ள விஞ்ஞான ஆசிரியர்களிடம் சேர்க்கப்படும்.

இப்பரிசோதனையில் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளினின்றும் ஐம்பதிற்கு மேற்பட்ட பாடசாலைகள் ஒத்துழைக்கின்றன. இப்பள்ளிக்கூடங்களின் விஞ்ஞானப் பரிசோதனைச் சாலைகள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இப் பரிசீலனையில் ஒவ்வொரு வகையிலும் உள்ள

1. உவர்ப்புத்தன்மை; ஒவ்வொரு லீட்டரில் (Litre) உள்ள குலோரைட் (Chloride) வீதம்.

2. நீரின் கடினம்; ஒவ்வொரு லீட்டரில் உள்ள கல்சியம் கார்ப்னேட் (Calcium Carbonate) வீதம்;

3. மொத்தக் களப் பொருட்கள்; ஒவ்வொரு லீட்டரில் உள்ள கிராம் (Grams) வீதம்.

என்பனவற்றை ஆராய்வார்கள்.

வட இலங்கை விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தார் (N. P. S. T. A.) இப்பரிசோதனைகள் வெவ்வேறு பாடசாலைகளிலும் ஒரே தன்மையாக நடாத்தப்படும் பொருட்டு இதனை விளக்கும் அறிவுப் பத்திரங்கள் வெளியிட்டுள்ளனர்.

இப்பரிசோதனைக் குறிப்புகள் இப்போ ஒழுங்காகக் கிடைக்கின்றன. இவ்வவதானங்களும் ஆராய்ச்சி முடிவுகளும் அடுத்த கட்டுரையில் ஆராயப்படும்.


USE

"MAGIC COAT" and "JALKOLIN"

DISTEMPER

*To brighten up your homes*

AVAILABLE FROM

**Mohamed Jalal**

220, KEYZER STREET,

Tele phone: 6167 COLOMBO-11.

# வரவே வராது

— செ. குணரெத்தினம் —

கஞ்சமலர் போன்றழகு வதனம் — கொவ்வைக்
கனிநிறத்தைக் கொண்டயிரு அதரம்
நெஞ்சினிலே காதல்வரும் வயது — உனக்கு
நினைவினிலே வருவதெலாம் புதிது.

கண்டவுடன் தலைகுனியும் தோற்றம் — உன்
கண்களுக்கு அம்பு, கயல் தோற்கும்
'வண்டுவிழி' வைத்திருக்கும் காலம் — நீ
வடித்தெடுத்த தங்கத் தாம்பாளம்.

தொட்டவுடன் முகம்சிவக்கும் வெள்ளை — நீ
தூரநின்றால் மேலுலகப் பிள்ளை
பட்டமரம் கூடவந்து பேசும் — நீ
பார்த்துவிட்டால் கண்களெல்லாம் கூசும்.

அச்சம் வந்தோடுகிற வயது — உனக்கு
அருகேமுன் காவல்களோ பலது
பச்சரிசிப் பற்களையே கண்டு — பல
பருவமுள்ளோர் வாடுவது முண்டு.

காலம்சில புரண்டால் போகும் — இந்த
கட்டான தோற்றமெல்லாம் மாறும்.
வாழ்வில் இதுவுமொரு வாழ்வு — போனால்
வரவேவராது இந்த வாழ்வு.

# கும்பனித் தெரு முகாம்

—"குந்தவை"—

நாலு புறமும் வளையம் வளையமாகச் சுற்றி அடைக்கப்பட்ட பெரிய முள் கம்பிகள்; நடுவே தென்னோலை வேய்ந்த பெரிய கொட்டில்; அதற்குள் மந்தைகள் போல் உலாவவிடப்பட்ட மனிதர்கள்.

இதுதான், இலங்கையில் வசித்திருக்கும் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் எனக் கருதப்படுபவர்களை அடைத்துவைத்திருக்கும் குவாரன்டைன் முகாம் - தலைநகரின் கும்பனித்தெரு முகாம்.

உள்ளே —

நீண்ட நேரம் கியூவில் நின்று காத்து, 'லவற்றி'க்குப் போய்விட்டு பிதுக்கிக்கொண்டு வெளியே வரும்பொழுதெல்லாம் அவனுக்குக் குமட்டிக்கொண்டு வரும. ஆனல் இந்த நீண்ட நாலு மாத காலத்திற்குள் அவனுக்கு இந்த வாழ்க்கை பழக்கமாகிவிட்டது.

குழாயடியில் கை கால்களைக் கழுவிக்கொண்டு நிமிர்ந்தபொழுதுதான், அக்கொட்டகையின் மேற்பார்வையாளரான கங்காணியின் குரல் கேட்டது.

இருந்தாற்போல் அவன் நெஞ்சிற்குள் ஒருவித குளிர்ச்சியின் பரவல் விசிறியடித்த சிலுசிலிர்ப்பு.

அவனுடைய குருப்பைச் சேர்ந்தவர்களை நாளைக்கு இந்தியாவிற்குத் திருப்பி அனுப்புவதற்காக தலைமன்னருக்குக் கொண்டு போகப் போகின்றார்களாம்.

அப்படியானல் அவனுமா?

ஒரு கணம் அப்படியே ஓடிப் போய், தன் குடும்பத்திற்கு முன்னல் நிற்க வேண்டுமென்று பரபரக்கும் துடிப்பு; அத்துடிப்பின் விளிம்பிலே தலைநீட்டித் தவிக்கும் இனம் தெரியாத எண்ணங்கள்.

அது முடியாதென்பதை அவன் உணர்ந்தபொழுது அவனுள்ளேயே ஆற்றுமை அலைபுரண்டு சலசலத்து ஓடிவருவது தெரிந்தது. அது தன்னை வெள்ளமாய் அமிழ்த்தி அலைக்கழிக்கும் முன் அதற்கு பிடிபடாமல் தப்பிப் பதுங்கிக்கொள்ள விரும்பும் ஒருவித அந்தரங்கமான துடிப்பும்கூட எழுந்தது.

அலைகள் திரண்டு வரத்தான் செய்தன. ஆனாலும் அவை ஒன்றை ஒன்று விழுங்க வரும் அசுரவேகத்தில் ஒன்ருேடு ஒன்று முட்டிமோதிச் சிதறுண்டு தெறித்தன.

அத்தெறிப்பின் ஊடாக இடுப்பில் குழந்தையுடன் கண்ணீரைக் கண்ணிமைக்குள் தெப்பம் கட்டித் தேக்கிக்கொண்டு, அவனுக்கு விடை கொடுத்த அவளின் உருவம்.

வாசலில், வீட்டை அடகு வைத்துப் பெற்ற பணமாகிய நூறு ரூபாயைப் பெற்றுக்கொண்டு, அவனை அக்கரைக்குச் சேர்த்துவிட முனைந்த புண்ணியவான் தரகன் ரூபத்தில் நிற்கின்ருன்.

கையில் துணிமூட்டையுடன், மனைவியைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு அவன் தரகனோடு நடக்கின்ருன்.

இலங்கைக்குப் போய்விட்டுத் திரும்பிவந்தால் பொன்னும்பட்டுமாய் சௌகரியமாக வாழலாம் என்ற நம்பிக்கையை அவன் மனதில் வேரூன்றச் செய்துவிட்டு, அது மரமாகி நிழல் தரும் என்ற

ணதிர்கால எதிர்பார்ப்பு ஒன்றினையே அவளுக்குத் தற்காலிக நிழலாக்கிவிட்டு அவன் இரவோடு இரவாய்த் தோணி ஏறி வந்துவிட்டான்.

''இந்தாப்பா! சாப்பிடப் போகல்லையா?'' என்ற அதட்டல் கேட்டது. கங்காணியின் குரல்.

சாப்பாடு கொடுக்கும் இடத்தில் கூட்டம் வளையமிட்டு நின்றது. நிதானமாகச் சுரத்தேயின்றி தன் பங்கு உணவைப் பெற்றுக் கொண்டு அவன் தான் வழக்கமாக இருந்து சாப்பிடும் இடத்திற்கு வந்தான். ஒரு கையில் காய்ந்த பாண் (ரொட்டி) துண்டும் சம்பலும் மற்றக் கையில் ஒரு குவளைத் தேநீர்.

பிய்த்தெடுத்த ஒரு துண்டை சம்பலுடன் தொட்டு வாய்க்குள் போட்டுக்கொண்டான்.

தோணி ஏறுமுன், முதல்நாள் இரவு, மனைவி கவளம் கவளமாக உருட்டிக்கொடுத்த பழம்சோற்றைத் தான் சுவைத்து உண்ட காட்சி நினைவுக்கு வந்தது. உணர்ச்சி பொங்கிய வேகத்தில் நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது. பாண்துண்டு தொண்டைக்குள் அடைத்துக்கிடந்து கொண்டு தவித்தது.

தேநீரை ஒரு மிடறு தொண்டைக்குள் ஊற்றிக்கொண்டான். அடைத்த நெஞ்சை நுட்பமான ஒருவகைப் பரிதவிப்பு வெட்டி வெட்டி ஊர்ந்து அரித்தெடுத்தது.

அவன் வேதனையைச் சமாளிக்க முயன்றான். நினைவைச் சமாதானப் படுத்தும் முனைப்பு. நாளைக்குப் புறப்பட்டால் இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே குடும்பத்தை அடைந்துவிடலாமே! பின் ஏன் இந்த வேதனை? வெறுங்கையுடனா? 'சட்' என அவனுக்குத் தன்னை உலுக்கும் வேதனையின் உண்மை நிலை, முழு உருக் கொண்டு தென்படுவது போலிருந்தது. அவனைப் பிரிந்திருந்த காலத்தில் வாழ்க்கைப் பிரச்சினையைச் சமாளிக்க அவள் பட்ட துன்பங்களை எல்லாம் பயனற்றதாக்கிவிட்டதைக் கூறிக் கொண்டு எந்த முகத்தோடு அவளின் முன்னால் போய் நிற்க முடியும்?

ஏமாற்றப்பட்டுவிட்ட ஆத்திரம், ஏக்கம், ஆற்றாமை யாவும் ஒன்றாய் குமைத்துக்கொண்டு மண்டின. அந்தப் புகைச்சலை யாரிடம் அவன் வழித்துக்கொட்டி ஆற்ற முடியும்? அந்த முகாமிற்குள் இருக்கும் பலரின் கதையும் அதே மாதிரியானதுதானே.


கண்கள் மாரிமுத்துவைத் தேடின. சாப்பிடும்பொழுதுகூட இருப்பவனாயிற்றே.

கம்பி வளையத்தருகே, வெளியே பார்த்தவாறு நிற்கும் மாரிமுத்துவின் முதுகு தெரிந்தது. முள்வேலிக்கப்பால் ஒரு பெண் - ஜாக்கெட்டும் துணியும் அணிந்த அவனின் சிங்கள மனைவி. கூடவே தாயின் சேலையைப் பிடித்தவாறு நின்ற இரு குழந்தைகள்.

கன்னம் முழுக்க வெள்ளமான அவளின் முகம். காலை வெய்யிலில் பட்டுத் தெறித்தது.

மாரிமுத்து முள்வேலியிலிருந்து திரும்பிவந்தான். கையில் ஒரு பொட்டலம் இடியப்பங்கள். அதில் வழக்கமானபங்கு கண்ணுச்சாமிக்கும் உண்டு. சாப்பாட்டின் ஊடே தான் கேட்ட செய்தியைக் கூறினான். இருவரும் ஒரே குரூப் தானே.

அதைக் கேட்டதும் மாரிமுத்துவின் முகம் வதங்கிவிட்டது. வேதனை இழை அதனூடே புடைத்துப் பொருமியது தெரிந்தது.



''என்னைப் பிடிச்சு அனுப்பிட்டாங்கண்ணு ஐயோ! நான் என்ன அண்ணே பண்ணுவேன்? இவங்களை விட்டுட்டு நான் என்னன்னு போவேன்? எனக்கு அங்கே யார் இருக்காங்க?'' தொண்டைக்குள் கமறும் விம்மல், பேச்சை வரட்டித் தடுத்தது.

மாரிமுத்துவின் கதை வேறு மாதிரியானது. அவன் மனைவி மக்கள் இலங்கைக் குடிகள். அவர்களிடமிருந்து அவன் கதறக் கதறப் பிரிக்கப்பட்டு இந்தியாவிற்கு அனுப்பப்படவிருக்கின்றான். இங்கேயே பிறந்து வளர்ந்து குடியும் குடித்தனமுமாய் விட்டவன் - அக்கரையைக் கண்ணாலும் பார்க்காதவன், இந்தியப் பெற்றோருக்குப் பிறந்துவிட்டமையால் இலங்கைக் குடி இல்லையாம். அவனும் 'கள்ளத் தோணியாம்!

அந்தப் பெண் - அவனுடைய சிங்கள மனைவி அடிக்கடி கண்ணீர் தோய்ந்த முகத்துடன் முள் வேலிக்கப்பால் வந்து நின்றுவிட்டுப் போகின்றாள். மனைவியைக் கண்டு பேசிவிட்டுத் திரும்பும்போதெல்லாம் அவன் கையில் ஏதாவது உணவுப் பொட்டலம் இருக்கும். கண்கள் உடைந்த கண்ணாடிச் சில்லுக்களாய் பளபளக்கும்.

அவனையும் மாரிமுத்துவையும் மௌனமாகப் பிணைத்தது ஒரே நினைவுதான். தத்தம் குடும்பத்தோடு கலக்க ஏங்கும் துடிப்புகள்தான். ஆனாலும் இவ்விரண்டும் வெவ்வேறு வகையானதே ஒரு அதிசயம்.

குடும்பத்தோடு சேரும் நிகழ்ச்சியில் செறியப்போகும் உருக்கத்தை அவன் நினைத்து உருகும்பொழுது மாரிமுத்து குடும்பத்தைப் பிரியும் பொழுது தகிக்கப் போகும் வெப்பத்தை எண்ணிப் பரிதவிக்கிறான். மனைவி மக்களை இந்த மட்டிலாவது பார்க்க முடிகிறதே என்ற அற்ப திருப்தியும் பறிக்கப்படப்போகின்ற அவஸ்தை.

அவனுக்கு குடும்பம் எழுப்பும் நிலையான நெருக்கத்தில் அக்கரைக்கு வந்து மாடாய்உழைத்து ஏமாந்து அல்லல்பட்டுத் திரும்பிய நிகழ்ச்சியின் கறை விரைவாய் மறைந்துவிடும். ஆனால் மாரிமுத்துவிற்கோ?

நெருக்கம் என்பதே அவனுக்கு இனி இல்லை. தூய்மையான அன்பின் பிணைப்பு பிரிக்கப்பட்டுவிட்டது. உறவோடு உறவாய் போற்றி வளர்ந்த வாழ்வு பிடுங்கப்பட்டுவிட்டது.

வெய்யில் ஏறத்துவங்கிவிட்டது.

கூரை இடுக்கு வழியே ஒழுகிய சூரிய ஒளி, மணலில் இறங்கி வெள்ளி நாணயமாய் கிடந்து ஒளிர்ந்தது.

காற்றோட்டமற்ற நெருக்கடியான கொட்டிலுக்குள் புழுக்க

மும் நசநசப்பும் வந்து கௌவி இறுக்கத் துவங்கின.

முதுகில் வேர்வை ஊறிக் கசிந்தது. குளிக்க வேண்டும். ஆனால் மனமே இல்லை. அதுவும் ஒரு குளிப்பா? கியூவில் நின்று கிடைக்கும் ஒரு வாளித்தண்ணீரை நின்ற இடத்திலேயே கொட்டிக்கொள்வதற்குப் பெயர் குளிப்பா?

வழமையான செயல்களைக்கூட ஒடித்துப்போட விரும்பும் மந்தமான நிலை. உடலும் உணர்வும் வெதும்பிச் சேர்ந்திருந்தன.

நகர்ந்து நகர்ந்து மேலேறும் ஒளி வட்டத்தினூடாய் இயற்கையின் நடப்பு இயங்கிக்கொண்டிருந்தது. மூச்சின் தேக்கமும் அனல் நெடியும் மூக்கை நிறைத்தன.

அவன் இருந்த இடத்திலேயே முடங்கிக்கொண்டு படுத்துவிட்டான். வேர்வை முத்திட்ட உடம்பை மணலில் அழுத்திய பொழுது இதமாக இருந்தது.

இப்படிப் படுத்துக்கொண்டதும் மனதில் ஏதோ ஒரு அவசரம். அது உள்ளத்தை அமுக்கும் ஏமாற்றத்தின் எதிரொலியை எண்ணப் புதைவிற்குள் புகுந்து மறைத்துக் கொள்ளும் அவசரம். தாபத்தின் வெம்மையை நினைவுகளின் விரிந்த நிழலாட்டத்தில் ஒதுங்கித் தணிக்க அலையும் அவசரம்.

மூடிய கண்களுக்குள் கரடுமுரடான சம்பவக் கோவை பாதை விரிந்தது. அதில் நினைவுகள் இடறி இடறி விழுந்தெழுந்தவாறு ஓடத் தலைப்பட்டன. சரளைக் கற்களின் மேல் குலுக்கிப்போட்டு ஓடும் வண்டியாக.

அவர்கள் மொத்தம் பதினைந்து பேர்கள். இருள் போர்வையில் முன்பின் அறியாத சிற்றூர்களைப் பிளந்துகொண்டு தரகன் காட்டும் பாதையில் இரைக்க இரைக்க நடக்கின்றனர். தோய்ந்து துவளும் கால்கள் நடையைத் தள்ளாட்டமாக்க இதற்கு முடிவே இல்லையா என்ற தவிப்பே மனதில் சூழ்ந்துநிற்க அவர்கள் நடையாய் நடந்தது.

ஒருவழியாக ஒரு கடற்கரையை அடைந்ததும் கடலில் அசைந்து கொண்டிருந்த தோணி இருட்டில் கரும்பாறையாகத் தெரிகின்றது. தரகன் ''சீக்கிரம் சீக்கிரம்'' எனத் துரிதப்படுத்த இடுப்பளவு வரை நீருக்குள் இறங்கி பொலீஸ்படை வந்துவிடுமோ என்ற பயத்தோடு முண்டியடித்துக்கொண்டு படகில் தொற்றியது. அப்பொழுது அவசரத்தில் தட்டுத் தடுமாறி விழப்போன அவனை படகிற்குள் நின்ற தண்டல்காரன் முரட்டுத்தனமாகப் பற்றி இழுத்து உள்ளே போட்டபொழுது, 'விண்' எனப் பயங்கரமாக வலித்த அவனின் தோள்பட்டை.

ஆடி அசைந்து ஊர்ந்த தோணிக்குள், ஒரு பகலும் இரவுமாக முழுநாள் அவர்களின் சட்ட விரோதமான பிரயாணம் நடக்கின்றது. அப்பொழுது அவர்கள் அனுபவித்த சங்கடங்கள்; துன்பங்கள்.

மூர்க்கமாக அறைந்த காற்று; உள்ளத்தையே அமுக்கி நெரிப்பது போன்ற திணறல். இரவில் உடலை அலுத்த பனி; இதயத் துடிப்பே நெஞ்சின் மூலையில் ஒட்டிக்கொண்டு வெடவெடப்பது போன்ற பிரமை.

உச்சிவேளையில் மண்டையைப் பிளந்த சூரியன். மண்டைக்குள் ஊற்றெடுத்துச் சுற்றி வந்த வேதனை தரும் நீர். மூடிய இமைத் திரையில் திட்டுத் திட்டாய் மிதந்த சிவப்பு உருண்டைகள். தலைச் சுற்றல்; மயக்க நிலை, புரட்டும் வயிறு; வாந்தி.

அந்தி மயங்கி, ஒளி ஓய்ந்து வந்த நேரத்தில், பச்சை விரிப்

பாய் நீண்ட கரையோரம் தெரி கின்றது. வலிப்பதை நிறுத்தி இறங்கி ஓடும்படி கட்டளையிட்ட தண்டல்காரனின் குரலில், ஒரு கணம் தாமதித்தாலும், பிடித்துக் கடலுக்குள் தள்ளிவிடுவான் போலத் தொனித்த உக்கிரம்; 'தொப்' என ஒருங்கே குதித்த பொழுது, அந்த அதிர்ச்சியில் எகிறி அவர்களை விழுங்க வருவது போலக் கவிந்த பேரலை. அதே நேரத்திலும் படகில் தயங்கி நின்ற இருவரைத் தண்டல்காரன் புரட்டித் தள்ளிய கொடூரத்தினைக் கண்ட மன உறுத்தல்.

பொங்கிக் குமுறும் அலைகளோடு போராடிய பின், அவர்கள் கரையில் ஒதுக்கப்படுகின்றனர். முன் பின் தெரியாத ஊரில் அவர்கள் மிரண்ட அதே நேரத்தில், வந்து, அவர்களின் உழைப்பின் பயனை முன்கூட்டியே எடுத்துப் பேரம் பேசிய சிலர், வழிகாட்டும் தேவ தூதர்களாகக் காட்சி தந்த விதம் அவர்களையே சரண் என அடைந்துவிட்ட அடைக்கல நிலை.

அன்று பகல், அவர்கள் காட்டிய குடிசையில் பதுங்கியிருந்துவிட்டு அடுத்த இரவு மூன்று கார்களில் அடைக்கப்படுகின்றனர். இலங்கையின் வட பகுதியிலிருந்து, தென்புற மலைநாட்டுச் சிறு முதலாளிகளின் ஊர்களை நோக்கித் துவக்கிய அவர்களின் நெடுவழிப் பயணம்.

இரவின் பயங்கர அமைதி. தொடர்ச்சியான இலைகளையும் மரங்களையும் தாவி விழுங்கி உமிழ்ந்தவாறு பாய்ந்தோடும் கார். அதன் ஓசையை பேரோசையாகிக் கனந்து நெஞ்சை அழுத்த ஒருவரை ஒருவர் பார்த்தபடி இனம் தெரியாத வெறித்த நிலையில், அவர்கள் அசையாமல் காருக்குள் இருந்த மோனநிலை.

நடு வழியில் டிரைவர் காரை நிறுத்திவிட்டு எங்கோ போய் விட்டுத் திரும்பி வருகின்றான். நடுங்கும் அவனின் போதைக் கரங்களில் சிக்கிக் கார் தள்ளாட்டம் போட்டபொழுது அகற்கேற்ப அவர்கள் மனத்திலும் தள்ளாடிய ஒரு வகைப் பீதி. ஏதோ ஒரு நம்பிக்கையில் பலவற்றையும் சமாளித்துக்கொண்டு வந்தாயிற்றே. அது நிலைபெற்று நீடிக்கும் முன் உயிர் போய்விடக்கூடாதே என்ற கிலி.

கார் டிரைவர் செய்திருந்த முன்னேற்பாட்டின்படி அவன் ஒரு நாட்டுப்புறக் கடை முதலாளியிடம் வேலைக்கமர்த்தப்படுகின்றான். அங்கு இரவு பகல் என்ற பேதமின்றி, அடைக்கப்பட்டு அவன் வேலை வாங்கப்பட்ட விதம். உழைப்பு, அயர்ந்த நித்திரை இரண்டை மட்டுமே அறிந்தவனாய் அவன் தேய்த்து அழித்த எட்டு மாதங்கள். இருந்தும் தன் உழைப்பின் பயனாக ஒரு சிறு பணத்தையும் அவன் காண முடியவில்லை. தனக்கு வேலை தந்ததற்காக அந்த முதலாளிக்கு அவன் கொடுக்கவேண்டிய பெருந் தொகையான முன்பணம். அவனை இங்கு கூட்டிவந்து வேலைக்கு ஒப்புதல் கொடுத்த டிரைவருக்கு கிடைக்கவேண்டிய 'கமிஷன்.' இவைக்காகவே அவன் ஓய்வின்றி உழைக்க நேரிட்டது.

அதற்கும் ஒரு முடிவைத் தருவது போல ஒரு நாள் போலீஸ் வான் ஒன்று அவன் கடை வாசலில் வந்து நிற்கின்றது, இனி உழைப்பின் பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கை தலை தூக்கும் பொழுது. போலீஸிற்கு முதலாளி கூறிக்கொண்டிருந்ததை தனக்குத் தெரிந்த சிங்களத்தில், விளங்கிக்கொண்ட பொழுது அவனடைந்த மனக்கிளர்ச்சி, பொருமிய பொருமல். 'முன் பணம்' என்ற பெயரில் அவனின் உழைப்பின் சக்தியை உறிஞ்சிக்கொண்ட திருப்தியோடு சம்பளம் கொடுத்து வேலை வாங்கும் நிலை ஏற்பட்ட உடன்,

அவர் ஒன்றும் தெரியாதவர் போல் போலீஸுக்கு தகவல் கொடுத்திருந்தார்.

. "அண்ணே! அண்ணே!" மாரிமுத்துவின் உலுப்பல், சிந்தனை ஓட்டத்திற்கு கட்டை போட்டது.

வேட்டியைச் சரியாக்கிக் கொண்டு எழுந்து நின்றான். வண்டிச்சுவடாய் நினைவு வரிசை ஓடிய மனத்தில் ஏக்கத்தடம்.

''நாளைக்குப் போறவங்களின் பெயரை வாசிக்கிறாங்க''. 'படபட' என மனம் அடித்துக்கொண்டது. உடலெங்கும் ஒரு வகைப் பரபரப்பு.

கங்காணி பெயர்களை வாசித்துக் கொண்டிருந்தான். ''ஆர். கார்த்திகேசு... எம். முனியாண்டி...''

ஒவ்வொரு பெயராக அவன் காதில் விழுந்து ஒலித்து மறைந்து கொண்டிருந்தது. தன் பெயரின் ஒலி வடிவத்தை எதிர்பார்த்து மனம் அசையாமல் காத்து நின்றது.

''மாரிமூத்து''

மாரிமுத்துவின் முகத்தை நிமிர்ந்து பார்க்க அவனுக்குத் தைரியம் இல்லை. இந்த நேரத்தில் அவனை அனுதாபமாகப் பார்ப்பதே ஒரு வித கொடுமை என அவனுக்குப் பட்டது. என்றாலும், மாரிமுத்து சிரமப்பட்டு உதட்டை அழுத்திக் கடித்துக்கொண்டு நிற்பது போன்ற உணர்வு தட்டியது.

''இவ்வளவு பேரும்தான் நாளைக்கு அனுப்பப்படப் போறாங்க'' என்ற கங்காணியின் குரல், பெயர் வாசிப்பிற்கு முத்தாய்ப்பு வைத்தது. அவன் சிலிர்த்துக்கொண்டு நிமிர்ந்தான். அடி வயிற்றில் சில்லிட்டது போன்ற உணர்வு.

''இந்த குரூப்பைச் சேர்ந்த சில பேருக்கு இன்னும் பிரயாணச் சீட்டு வந்து சேரல்லே. ஆனபடியா அவங்களை இந்த முறை அனுப்ப முடியாது.

பெயர்த்தெறிய முடியாப் பாரமாய் ஏதோ ஒன்று நெஞ்சில் வேகமாய் வந்து விழுந்தது. 'சட்' என அதை நம்பிக்கொள்ள முடியாத மலைப்பு.

போகக்கூடாதெனத் துடிப்பவன் இந்த அடைக்கப்பட்ட வாழ்வாவது நீடிக்காதா என நப்பாசைப்படுபவன், கட்டாயமாகப் பிரித்தெடுத்து அனுப்பப்படப் போகின்றான். அதே நேரம், எப்பொழுது போகலாம் எனத் துடிப்பவன் இந்த வாழ்க்கையிலிருந்து விடுபட விழைபவன் போக முடியாது தடுக்கப்படுகின்றான்.

தூண்டப்பட்ட ஆசையின் வேகம் இந்த ஏமாற்றத்தின் தாக்கத்தில் ஆவேசத்துடன் இறங்கி, உள்ளூரச் சுட்டெரித்தது இந்தத் தாபத்தினைப் பொறுத்துக் கொண்டு இன்னும் எத்தனை நாள்கள் இங்கு இருக்க வேண்டுமோ?

போலீஸ் வான் ஒன்று முகாமிற்கு முன்னால் வந்து நின்றது. கவனத்தை அது ஈர்த்தது வானிற்குள் திணிக்கப்பட்டிருந்த ஆட்கள் இடிபாடுகளுடன் இறக்கப்பட்டனர். கைதிகளைப் போல், முன்னும் பின்னும் போலீஸ் காவலுடன் உள் நடத்தப்பட்டனர்.

இது ஒன்றும் புதிதல்ல; நாட்டின் மூலை முடுக்குகளிலிருந்து எல்லாம் 'கள்ளக் குடியேற்றக்காரர்' என்ற பெயரில் பிடிபடுபவர்களை இங்கே கொண்டு வந்து தள்ளுவது அன்றாட நிகழ்ச்சி.

அயல் நாட்டை பொன் கொழிக்கும் நாடாக எண்ணி ஓடி வந்து, தம் அறியாமையினால் சொந்த நாட்டின் பெயருக்குக் களங்கம் தேடித்தரும் இவர்கள் — பரிதாபகரமானவர்கள்;

ஏமாற்றுக்காரர்களை நம்பிய குற்றம் ஒன்றையே செய்தவர்கள்.

இப்படி அன்றொருநாள் தானும் கொண்டுவந்து இறக்கப்பட்டதை நினைத்தவுடன் அவனுக்கு தனக்குத் தானே தீவிரமாய் அனுதாபப்படுவது போன்று உணர்ச்சி ஓடி உறைத்தது.

கூடவே தனக்காக மட்டும் ஏங்கி நின்ற தனித்தன்மை நீக்குவது போலவும் இருந்தது. அவர்களில் அவனும் ஒருவன் அல்லவா?

இந்த விசாலமான பொதுத் தன்மை அவனிடையே ஓடிக் கலந்த பொழுது தன் தாபத்தைப் போல் எத்தனையோ துயரக் கதைகள் இங்கு துடிக்கின்றதென்ற உணர்ச்சி பரவிய பொழுது அவ்வுணர்ச்சி அவனுக்குத் தெம்பை அளிக்கவில்லை. மாறாக பிடுங்கி எடுத்து இம்சைப் படுத்தியது. கண்களில் நீர் பொத்துக் கொண்டு வநதது.

இம்முறை அவன் வருந்தியது தனக்காக மட்டுமல்ல. அந்த முகாமிற்குள் அடைக்கப்பட்டிருக்கும் எல்லோருக்குமாகத்தான்.

# "அருணனைத் துதிப்போம்"

(மட்டுநகர் முத்தழகு)

''ஈழச் சுடரே!''
என்னிரு விழியே!
இல்லம் சிறக்கும்
புன்னகை மலரே!
ஆளும் ஆண்மையால்
அமிழ்ந்ததென் வேந்தே!
வாழும் வகையை
வகுத்ததா யகமே!''

பாடும் மீனே!
பால்முக நிலவே!
பாலர்கள் பருகும்
பல்லிசைத் தமிழே!
ஓடும் நதியே!
உயர்கொம்புத் தேனே!
உழவர்கள் உழைப்பால்
உயர்ந்தநெல் மணியே!

அறுவடைக் கரமே!
ஆதவன் மனம்போல்
அள்ளியே குவிப்போம்;
அன்புடன் வாழ்வோம்.
நிறங்களில் புதுமை
நீதியில் நேர்மை
அறத்திலே அணையா
அருணனைத் துதிப்போம்.

* கவர்ச்சிகரமான சித்தைத் துணிகள்

* உறுதியான 'சூட்டிங்' 'சேட்டிங்' பிடவைகள்

* அழகிய வோயில் சேலை வகைகள்

அனைத்தும் சகாயமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய
ஒரே ஸ்தாபனம்

# பெர்ணாண்டோ கம்பெனி

**131, இரண்டாம் குறுக்குத் தெரு,**
**கொழும்பு-11.**

தொலைபேசி: **7443**    தந்தி: **"HELENLUC"**



# *Olympia*

## *Typewriters*

*IN*

*SINHALA, TAMIL & ENGLISH*
*for better results*

*use* ***Olympia***

# OFFICE APPLIANCES LTD.,

3, Galle Face Court 2,
COLOMBO-3.    *Tel.* **2577, 7683**

# காங்கேசன்துறை

## தமிழ்ப் பிரதேசத்தின் ஓர் கோபுரவாயில்

—ஓர் பொருளியல் அறிஞர்—

ஈழத்தின் வடகரையில் அமைந்துள்ள காங்கேசன்துறை பல நூற்றாண்டுகளாக ஈழத்தின் முக்கிய துறைகளுள் ஒன்றாக இருந்துவந்தது. இரண்டாவது உலகப்போர் வரையும் பிறநாட்டு வர்த்தகம் அரசாங்கத்தினாற் கட்டுப்படுத்தப்படாத வகையில் நடைபெற்று வந்தது என்பது நாம் அறிந்ததே. அக்காலத்தில் இந்தியாவிலிருந்து அரிசி, நெல், மற்றும் தானியங்கள், செங்கட்டி ஓடுகள், கால்நடை போன்றவைகளும் பர்மா, சீயம் முதலிய நாடுகளில் இருந்து அரிசியும் வேறு உணவுப்பொருட்களும் இத்துறை வழியாக ஈழத்தின் வடபகுதி மக்களின் தேவைகளை நிரப்பும்பொருட்டு இறக்குமதியாகிவந்தன. இவ்வர்த்தகப் பொருட்களைக கொண்டுவரும் கப்பல்களுக்கும், தோணிகளுக்கும் வழி காட்டும்பொருட்டு காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள கலங்கரை விளக்குக் கோபுரமும் இங்கு இப்போது பாழடைந்துபோகும் நிலையிற் காணப்படும் கழஞ்சியங்களும் பழைய காலத்து தனியார்துறை வர்த்தகச் செழிப்பையும், சிறப்பையும் நினைவுறுத்தும் சின்னங்களாக விளங்குகின்றன.

காங்கேசன்துறையிலும் அயற் கிராமங்களிலும் உள்ள அநேக மக்கள் பல தலைமுறைகளாகக் கப்பற் பொதிகள் ஏற்றுவதிலும், இறக்குவதிலும் திறமையுள்ளவர்கள். இவர்கள் ஈழத்தின் மற்றைய பகுதிகளில் உள்ள மக்களிலும் பார்க்க மிக்க திறமையுள்ளவர்கள் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும வகையில் வெள்ளிடையாகியது. கொழும்புத்துறைமுகத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக சில உணவுக் கப்பல்கள் காங்கேசன்துறைக்கு அனுப்பப்பட்டன. அங்குள்ள தொழிலாளிகள் வருடம் முழுவதும் இத்தொழிலையே செயயாதவர்களாகவும் அத் துறைமுகத்தில் பொதிகள் காவும் படகுகளின் உதவி இல்லாதவர்களாகவும் கடலுள் இடுப்பளவு தண்ணீரில் பொதிகள் சுமந்து செல்லவேண்டியவர்களாகவும் இருந்தபோதிலும் அவர்கள் ஒவ்வொருவரும் சராசரியாக நாள் ஒன்றுக்கு கொழும்புத் தொழிலாளர்களிலும் பார்க்க ஏறக்குறைய இரண்டு பங்கு நிறையுள்ள பொதிகள் ஏற்றியிறக்கும் திறமையைச் சாதித்துள்ளார்கள்.

நாட்டுக்கு தேவையான இறக்குமதிகள் முழுவதையும் கொழும்பில் இறக்கி அங்கிருந்து ஈழத்தின் மற்றப் பகுதிகளும் விநியோகிக்கும் முறையினால் அநேக துர்ப்பலன்கள் ஏற்படலாம். உதாரணமாக, வழமையான உள்நாட்டுப் போக்குவரத்து முறைமை (வெள்ளம், உள்நாட்டு அமைதியின்மை போன்ற காரணங்களினால்) தடைப்படும்போது தூரப் பிரதேசங்களில் உள்ள மக்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள் கிடைக்காது அதிக கஷ்டத்துக்குள்ளாகலாம். மேலும் கொழும்பு மாத்திரம் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் துறையாக இயங்குவதால் மற்றைப் பகுதிகளில் உள்ள திறமைசாலிகளான மக்களுக்கு துறையில் பொதிகாவும் வேலை கிடைக்கும் வாய்ப்புக் கிட்டாமற் போகலாம். ஒரு துறைமுகம் அபிவிருத்தியடைந்து அதிக முயற்சிப்பட்டால் அயலில் உள்ள பகுதிகளும் அபிவிருத்தியடைந்து செழிப்புறும். ஆதலால்

முன்னேற்றம் அடைந்து வரும் எந்த ஒரு நாடும் இயற்கை வசதி களுடன் அமைந்துள்ள தன் துறை முகங்களை அபிவிருத்தி செய்வது மிகவும் அவசியமாகின்றது. துறை முக அபிவிருத்திக் கொள்கை நாட்டின் இன, மத வேற்றுமை களில் பாதிக்கப்படலாகாது.

காங்கேசன் துறையின் அபி விருத்தியின் அவசியத்தை விளக்க இன்னும் ஒரு காரணத்தை எடுத் துக்கூறலாம். துறைமுகத்துக்கு அருகாமையில் நிறுவப்பட்டுள்ள சீமெந்து உற்பத்தித் தொழிற் சாலைக்கு இத்துறைமுகத்தை அபி விருத்தி செய்வதனுல் அநேக நற் பயன்கள் ஏற்படக்கூடியதாக விருக்கின்றது. அத்தொழிற் சாலைக்கு வேண்டிய எரிபொருட் களை கடல் மார்க்கமாகத் தருவிப் பதனுல் அப்பொருட்களின் செலவை ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு அளவுக்குக் குறைக்க லாம். அங்கு உற்பத்தியாகும் சீமைந்தை தென் பகுதிகளுக்குக் கடல் மார்க்கமாக அனுப்புவத னுல் அப்பகுதிகளில் சீமெந்து விலையைக் குறைக்கக்கூடியதாக இருக்கும். இவை போன்ற இன் னும் பல நன்மைகள் இத்துறை முக அபிவிருத்தியினுல் ஏற்படும்.

காங்கேசன்துறையின் புகழும் சிறப்பும் பழமை வாய்ந்தமை. மேலே கூறியதுபோல் இத்துறை முகம் இலங்கையில் பிறநாட்டு வர்த்தக வரலாற்றில் முக்கியத்து வம் பெற்றிருந்ததோடு இல்லாது, இந்துக்களுக்கு முக்கியமான இரண்டுபெரும் புகழ்வாய்ந்த ஸ்த லங்களும் அருகாமையில் கொண் டுள்ளது. மாவிட்டபுரத்தின் முரு கன்ஆலயமும் கீரிமலையின் நகு லேஸ்வரர் ஆலயமும் தீர்த்தமும் காங்கேசன்துறைக்கு மேலும் புகழ் பெற்றுத் தந்தவையாக விளங்குகின்றன.

அட்டைப் புகைப்படம் காங்கே சன்துறையில் உள்ள கலங்கரை விளக்குக் கோபுரத்தைக் காட்டு கின்றது.


○ சாய்ப்புச் சாமான்கள்

○ ராஜா பீடி ஸ்பெசல்

முதலிய பொருட்களில் ஏற்படும்
உங்கள் தேவைகட்கெல்லாம்

சிறந்த ஸ்தாபனம்

**ராஜா கோப்பரேஷன்**

60/62, டாம் வீதி,
கொழும்பு-12.

தந்தி: "கிறீன்வாட்டர்" தொலைபேசி: 4255

# இயற்கையே! நாணுதே! வா!

—மேல்வையூர்ப் பொன்னையா—

பொன்றும் அலைகள் குத்துநிற்ப நல்ல
சுந்தர நீலப் பட்டாடை கட்டி — வெண்
மன்றங்கள் கட்டியே வானம் வளர்ந்துன்றன்
வண்ண வெழிற்கு நிழற் பிடிக்கும் — விண்
தன்னிடம் கொண்டநீள் சாலைகள் போலவே
தங்க நிறக்கதிர் தாம் தெரிவ — பின்
பொன்னொளி போலங்கு கீழைத்திசையில் நன்கு
மேவி விளங்குவான் செங்கதிரோன்.

பாடிடும் புட்குலம் கேட்பன பூவைகள்
பாரினில் எங்கணும் வண்ணவெழில் — மற்றுச்
சாடிவரும் புனலாற்றிடையே வண்ணப்
பூக்கள் மலர்ந்து கலந்து வரும் — குழல்
சூடிமுடிக்கவே பெண்கள் குழாம் சூழ்ந்து
சிரித்த மலர்களை வீட்டுகின்றார் — வலம்
ஓடிவரும் சிறுர்கூட் டமெல்லாம் என்றன்
உள்ளம் மகிழ்ந்திடச் செய்குவரே.

வீணையை மீட்டிடும் மங்கையர்கள் பொழி
விதவித கானத்தின் நல்லிசையும் — உன்
ஆணையைக் கேட்டதும் ஆண்டவன் பாதம்போய்
அடைகின்ற பக்தர்கள் பேரொலியும் — புவி
பேணப் பிறந்தநற் பேருடை உழவர்கள்
மேதிகள் ஓச்சிடும் மேற்றொனியும் — கடல்
கோணத்திலே சென்று குவிமீன்கள் கொணர்பவர்
குரலுமே சேர்ந்திங் கினிக்குதம்மா.

புதியவொளி யாண்டும் பிறந்து வளர்ந்திட
பேரிகை கொட்டி முழங்குதம்மா — வெளி
குதித்துவரு கின்ற குளிர்ப்புனல் அருவிகள்
குன்றில் விளக்கம் இடுகுதம்மா — களி
நிதியை அளித்த பெருங் கொடையாளர் போல்
நிறைந்த மனமெங்கு மாகுதம்மா — வளி
பதிய வளர்ந்தெங்கும் பாங்குடன் வீசியே
பண்டை உணர்வெல்லாம் மூட்டுதம்மா.

இயற்கையே! அழகியே! நின்றன் வளமெல்லாம்
எடுத்துநான் சொல்வதும் ஆகுவதோ — குளக்
கயற்கண்கள் பிறழுது காட்சியே நல்குது
பளிப்பதன்றி வேறு அறிந்திலனே — எனை
மயல்கொண்ட பெண்ணேயென் வாழ்க்கைக் குரியநீ
வந்தென்றன் பாதையில் கூடுவையே — தெளி
நயமிங்கு நல்கிருய்! நானுன்னை நாடினேன்!
நாணுதே! என்னிடம் வந்தடுப்பாய்!

# யாத்திரைப் புகழ்வாய்ந்த மடுப்பதி

— ம. பத்திநாதன், B. A. (Cey.)—
ஆசிரியர், யாழ். புனித பத்திரிசியர் கல்லூரி

இலங்கையில் முக்கிய கத்தோலிக்க யாத்திரைத் தலமாக விளங்குவது மடுத் திருப்பதியாகும். பழம்பெருமை வாய்ந்த இத்திருப்பதி கத்தோலிக்கரால் மாத்திரமல்ல மற்றைய மதத்தவர்களாலும் ஏற்றிப் போற்றப்படுகின்றது. திருப்பதியின் விழாக்காலங்களில் ஏராளமான இந்துக்கள் இப்பகுதியைத் தரிசித்துக் காடுறை செல்வியின் கருணையை வேண்டி நிற்கின்றனர். விழா நாட்களில் ஆராதனைகள் தமிழிலும் சிங்களத்திலும் நடைபெறுகின்றன. ஏராளமான சிங்கள மக்கள் இப்பதியைத் தரிசித்து அன்னையின் அருளை அடைய ஆசிக்கின்றனர். இவ்வண்ணம் மடுப்பதி ஒரு புனித யாத்திரைத் தலமாக விளங்குகிறது. அத்தோடு அமையாது இந்துக்கள், கத்தோலிக்கர், தமிழர், சிங்களவர் என்ற பாகுபாடின்றி மக்கள் ஒருங்கு குழுமும் இடமாக விளங்கி தேசிய ஒற்றுமைக்கு வழி வகுக்கும் சாதனங்களில் ஒன்றாக விளங்குகிறது.




பெருமைவாய்ந்த இத்திருப்பதி வரலாற்றுப் பழமை வாய்ந்ததாக விளங்குகிறது. போர்த்துக்கேயர் கீழைநாடுகளுக்கு வந்ததைத் தொடர்ந்து கீழைநாடுகளில் கத்தோலிக்க மதம் பரவத் தொடங்கியது. இந்தியாவில் யேசு சபையைச்சேர்ந்த புனிதபிரான் சீஸ்கு சவேரியார் பல அற்புதங்களை நிகழ்த்திக் கத்தோலிக்க மதத்தைப் பரப்பினார். அவரது கீர்த்தி எவ்விடத்தும் பரவியது. இதைக் கேட்ட மன்னார் வாசிகள் தாமும் அவரது போதனையைக் கேட்டுக் கத்தோலிக்க மதத்தைத் தழுவ ஆவலுற்று, கி. பி. 1544ல் புனித சவேரியாருக்கு ஒரு தூது அனுப்பினர். ஆனால் இந்தியாவிலிருந்த வேலைகளை விட்டு இலங்கை வர புனித சவேரியாருக்கு அவகாசமிருக்கவில்லை. இதனால் தமக்குப் பதிலாகத் தமது பெயர்கொண்ட வேறொரு குரவரை அனுப்பிவைத்தார் புனித சவேரியார். இக்குரு தமது போதனை மூலம் மன்னார் வாசிகளில் அநேகரைக் கத்தோலிக்க மார்க்கத்திற்குத் திருப்பினார். இக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சங்கிலி அரசன் இம்மத மாற்றம் தனது அதிகாரத்திற்குப் பங்கம் விளைவிக்குமெனப் பயந்தான். இதனால் அறுநூற்றுக்கு மேற்பட்ட மன்னார்க் கத்தோலிக்கரைத் தூக்கி

விட்டான். (கொல்லுவித்தான்) எனவே சிரச்சேதம் செய்தான். இவ்வெதிர்ப்பினுல் சிதறுண்ட இறப்பின் நலம்பட இறக்கும் மன்னுர்க் கத்தோலிக்கரில் சிலர் மாந்தை என்னுமிடத்தில் கூடி தேவதாயரின் பேரில் ஒரு ஆலயத்தைக் கட்டினர்.

சங்கிலியன் எதிர்ப்பைத் தொடர்ந்து போர்த்துக்கேயர் மன்னுரைக் கைப்பற்றினர். கி.பி. 1658ல் மன்னுர் ஒல்லாந்தர் வசமாகியது. தொடக்கத்தில் ஒல்லாந்தர் முக்கியமாக அரசியல் காரணங்களுக்காகக் கத்தோலிக்கர்மேல் கடுமையாகவே நடந்துகொண்டனர். கத்தோலிக்கர் பல நெருக்கிடைகளுக்கு உள்ளாயினர். இதனுல் மாந்தைக் கத்தோலிக்கரில் இருபது குடும்பங்கள் மரியன்னையின் திருச்சுரூபத்துடன் 1670ல் கண்டி இராச்சியப் பகுதியை நோக்கிப் புறப்பட்டனர். இவர்கள் மாந்தைக்குத் தென்கிழக்கே 18 மைல் தொலைவிலிருந்த மருதமடுக் கிராமத்தை அடைந்தனர். இங்கு கண்டி மன்னனின் தீர்வைச் சாவடி ஒன்று இருந்தது. இவ்விடத்தில் மரியன்னையின திருச்சிலையைத் தாபித்தனர். பின்பு இவர்களுடன் யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தரின் நெருக்கிடைக்காளானவர்களில் எழுநூறு பேர் வந்து சேர்ந்துகொண்டனர். இவர்களுள் போர்த்துக்கீசத் தளபதி ஒருவனின் மகளான கெலனு என்பவளும் இருந்தாள். இவள் சாந்தா லேனு என்று அழைக்கப்பட்டாள். இவள் தீர்வைச் சாவடி அதிகாரியை மணந்தாள். இவளாலேயே மடுப்பதியின் முதல் தேவாலயம் கட்டப்பட்டது. இவள் பெயரால் இன்றும் இத்திருப்பதி ''சிலேனு'' மருதமடுவென அழைக்கப்படுகிறது.

மருதமடுவைப்பற்றி 17-ம் நூற்ருண்டின் மத்தியிலிருந்து இறுதிவரையான பல பரம்பரைக் கதைகள் வழங்குகின்றன. யாழ்ப்பாண இராச்சியப் பகுதியில் கொள்ளை நோய் பரவியபோது மடுத்திருச்சுரூபம் அவ்விடங்களில் கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்குச் சரித்திரபூர்வமான ஆதாரங்களில்லை. ஆனுல் இவ்வரை நூற்ருண்டுக் காலத்தில் ஒல்லாந்தரது நெருக்கிடையால் கத்தோலிக்க குருமார் நாட்டை விட்டு வெளியேறவேண்டி ஏற்பட்டது. கத்தோலிக்க சமூகம் மீகாமனற்ற மரக்கலமாய்த் தத்தளித்தது. ஒல்லாந்தரது நெருக்கிடைப் புயலில் அகப்பட்டு ஆழ்ந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டது. மடுப்பதிக்கும் இக்கதியே நேர்ந்தது. இதே தருணத்தில்தான் கர்மவீரரான யோசவ் வாஸ் முனிவர் 1687ல் இலங்கையில் காலடி வைத்தார். மங்கிக்கொண்டிருந்த கத்தோலிகக மறைக்குப் புத்துயிரளித்தார். மடுக்கிராமத்திலும் ஞானக் கடமைகளைச் செய்தார். மடுத் தேவாலயத்தை விருத்தி செய்தார். இவரைத் தொடர்ந்து 1695ல் பெற்ருேபெரஸ் சுவாமியாரால் மடுத்தேவாலயம் புனிதப்படுத்தப்பட்டது.

மருதமடுவில் இன்று காட்சி தரும் புனித ஆலயத்திற்கு அத்திவாரம் 1868ல் அதி. வண. பொஞ்சின் அவர்களால் இடப்பட்டது. இவர் யாழ்ப்பாண மேற்றிராணியாராய் இருந்தவர். இவரைத் தொடர்ந்து அதி.வண. மெலிசன், கியோமார் ஆகிய மேற்றிராணிமாரது விடாமுயற்சியால் தற்போதுள்ள தேவாலயம் சிறப்பாகக் கட்டிமுடிக்கப்பட்டது.



# ஆறுகள் முன்னோக்கி ஓடுகின்றன.

-செ. யோகநாதன்-

இடியப்ப உரலினுள் குழைத்த மாவைத் திணித்துக்கொண்டு தவமணி, பார்வதியின் கேள்விகளுக்கு மறுமொழி சொல்லிக்கொண்டிருந்தாள். தவமணிக்கு அருகிலுள்ள சுழகில், இடியப்பங்கள் அடுக்கிக்கிடந்தன. பார்வதி, பூவரசமிலைக் கொப்பினால் சுழகில் இலையான் மொய்க்காதவாறு விசிறிக்கொண்டிருந்தாள்.

முற்றத்தில் பழம்பாயொன்றில் காயப் போட்டுக்கிடக்கும் சாணக விருட்டியைப் பார்த்தபடி, தவமணி தன்னையறியாமலே முணுமுணுத்தாள்.

“தம்பியை இன்னுங் காணவில்லை கடைக்கு இடியப்பம் குடுக்கிற நேரமாச்சு. ஏழரையான் வசுவும் போட்டுது”

இடியப்பம் பிழிந்த தட்டைப் பானை வாயில் வைத்துக் குண்டானால் மூடுகையில் நீராவிச் சூடு கையில் சுள்ளெள்று தெறிப்பினும் அவசரத்தின் மூர்க்கம் அவற்றை மனங் கொள்வதில்லை. அது அவளுக்கு நித்திய பழக்கமுமாய்விட்டது.

“பார்வதி, அந்தக் கங்குமட்டையை இஞ்சாலை எடுத்துத்தா... அடுப்புப் புகையுது...”

பூவரசங் கொப்பு தன்னையறியாமலே சுழகின்மேல் வீச, ஏதோ யோசனையிலிருந்த பார்வதி

## தொழிலினல் நோய்

ஒருவரது நோய்க்கு அவரது உத்தியோகம் காரணமாகலாம். அதிக பொறுப்புடைய உத்தியோகத்தினருக்கு இருதய நோய் ஏற்படலாம். ஓரேயிடத்திலிருந்து வேலைசெய்வோருக்கும் இரத்தோட்டம், இரைப்பை, குடல் சம்பந்தமான நோய்களும் ஏற்படலாம். முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையேயுள்ள உளவியல் உடன்பாட்டு முறிவு காரணமாய் தொழிலாளிக்கு மூளை வியாதிகளுமேற்படலாம்.

நினைவு முறிய தன் கைத்தூரத்திற் கிடந்த கங்குமட்டையை இழுத்து, அவளிற்கு அருகாக, இடியப்பச்சுழகில் மண் படாதவாறு மெல்லத் தூக்கிக்கொடுத்தாள்.

''உம்மடை தம்பி பங்கை வாளுர்''

சுப்பிரமணியம் படலையை மிதத்திக்கொண்டு தெரிந்தான். அவன் திருநீற்றை நெற்றியில் அப்பி, சந்தணப்பொட்டிட்டு கைகளுக்கும் பூசி இழுத்திருந்தான். மார்பின் நடுப்பள்ளத்தில் திருநீற்றுப்பூச்சின் நடுவேயும் ஒரு பொட்டு.

தவமணி அவனைப் பார்த்துப் புன்னகைபுரிகையில் காவிளானின் வெள்ளைப் பூக்களைப்போல அவளின் பற்கள் ஒளியாடி, நிமிஷமாகு முன் இதழ்களின் இறுகுதலுள் மறைந்தன.

''வெள்ளாப்போடை பிள்ளையாரிட்டைப் போய் என்ன வரம் கேட்டனி?''

''அம்மாக்கு சுகம் வரவேணும். நாங்களும் நல்லாயிருக்க வேணுமெண்டு வேண்டிக்கொண்டு வாறன்''

ஆமையின் நடையாய் சுப்பிரமணியத்தின் அனுங்கி மெதுவாய் வெளிப்படும் சொற்கள் அவளின் காதிற்குள் விழும்பொழுது, அவள் மனங்கசிந்து அவனின் நினைவை நெஞ்சினுள் தழுவிப் புதைத்துக் கொண்டு, வியர்வையைத் துடைபபதுபோலக் கண்ணீரைத் துடைத்தாள்.

சுப்பிரமணியம் வயதை மீறி முதிர்ந்தது அவளிற்கு மகிழ்வென்ருலும் ஒருபுறம் ஏனே அதுவே கவலையாயும் தலை நிமிர்கின்றது. காவிழான் செடிகளைப் பிடுங்கி வண்ணுத்திப்பூச்சிகளை அடித்து வீழ்த்துவதும், இலந்தை மரத் தடியில் பொன்வண்டுகளைப் பிடிப்பதும், நாவல் மரத்தில் ஏறிக் கொப்புகளை உலுப்பிச் செங்காயில் இனிப்பைக் காண்பதுமான இளமைக்காலத்தில் அவற்றிவெல்லாம் லயிப்பின்றி அவனிருந்தான்.

''என்னவும் யோசனையிலை இருக்கிறீர். இடியப்பம் அழுக அவியுது''

பார்வதிக்கு தவமணி நினைப்பது என்னவென்று தெரியும். ஆனுலும் தவமணியை இந்த உலகில் கொண்டுவந்து நிறுத்துவது அவளிற்கு அவசியமாகப் பட்டது.

''புள்ளை நீர் பாலுங் கறக்க வேணும். இப்பிடியிருந்தீரெண்டால் இண்டைக்குமுழுக்கலும் நீர் யோசிச்சுக்கொண்டுதான் இருப்பீர்... நீர் மிளகாயைத் தாரும் நான் உரலுக்கை போட்டுச் சம்பலை இடிக்கிறன்''

பார்வதி பூவரசமிலைக்கொப்பை சுழகுதட்டில் வைத்துவிட்டு பாவாடையை இழுத்து இடுப்போடு செருகியபடி எழுந்தாள்.

''அக்கா கடைக்கு இடியப்பத்தை அடுக்கு...''

மூடுபெட்டியை நீட்டிக் கொண்டே சுப்பிரமணியம் சுழ கிற்குப் பக்கத்தில் வந்து குந்திய நிலையில் உட்கார்ந்தான்.

* * *

''பார்வதி போட்டுதே?''

''ஓம்... நீங்க மருந்தைக் குடியுங்க...''

மருந்துச்சிரட்டையைக் கையில் வாங்கிக்கொண்டே தவமணியின் தாய் சிவபாக்கியம் முணுமுணுத்தாள்.

''அது எளியதெண்டாலும் அவசரத்துக்கொரு தெய்வம் போலை''

நன்றியிற் சொற்கள் கைகூப்பின.

சிவபாக்கியம் தொண்டையைத் தடவுகையில், கழுத்திற் கிடக்கும் நூல் சிக்குப்படுகின்றது. புலித் தோலும், புங்கங்காயும் கோர்த்துக் கட்டிய அந்நூலும் வேர்வையின் ஊறலினால் இற்றுவிட அனுங்குகிறது.

''எச்சிற்படிக்கம்... இஞ்சை பக்கத்திலை வைக்கிறன்...''

பாயில், சிவபாக்கியம் ஒருக்களித்துச் சரியும்பொழுது, தவமணி எழுந்து முற்றத்திலுள்ள கறிவேப்பிலை மரத்தடியில் பரப்பிக்கிடக்கும் இடியப்பத் தட்டுகளையும் உரலையும் கழுவுவதற்குச் சென்றாள்.

* * *

தவமணிக்கு இருபது வயது ஆகிவிட்டது. அவளளவு வயதுதான் பார்வதிக்கும். பார்வதி தவமணியின் வளவிற்கு அடுத்த வளவிலேயே பிறந்த நாள் முதல் வளர்ந்துவருகின்றாள். கள்ளுச் சீவப் போகும் தகப்பனுக்கு அதிகாலையிலேயே சமைத்துக் கொடுத்துவிட்டு உடனடியாகத் தவமணி வீட்டிற்கு அவள் வந்து விடுவாள்.

தவமணிக்கு பதினேழு வயதாக இருக்கையில் அவளின் தகப்பன் இறந்துவிட்டார். யாழ்ப்பாணத்தின் பெரியகடைப் பகுதியில், கடையொன்றில் வேலை பார்த்த அவளின் தகப்பன் கந்தையா— அவர்களுக்கு ஒன்றரை பரப்புக் காணியை முதிசமாக வைத்து விட்டுச் செத்துப்போனார். கந்தையா இருக்கும்வரை 'முற்றத்து வெய்யில் முதுகிற் படாமல்' வாழ்ந்த அவர்கள் அவர் இறந்து ஆறு மாதங்கள் ஆகமுன் வறுமையின அம்மணமாகக் காணத் தொடங்கிவிட்டார்கள். கடைசியில் இடியப்பம் அவித்துவிற்க சிவபாக்கியம் தொடங்கிவிட்டாள்.

சிவபாக்கியம் உழைப்பாலும், நெருப்பின் வெம்மையாலும் நோயாளியாய் ஆகி இருமுகையில் தவமணி வலுக்கட்டாயமாய் அவளிற்கு ஒய்வு கொடுத்துவிட்டுத் தானே வீட்டின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டாள்.

அதிகாலையில் எழுந்து கைவிளக்கைக் கொழுத்தி, தவமணி அடுப்பை மூட்ட சுப்பிரமணியம் மாட்டுக்கொட்டகையில் சாணி அள்ளிக்கொண்டிருப்பான். இந்தக் கலகலப்பு பார்வதி வீட்டிலும் எதிரொலிக்கும்.

தவமணி இடியப்பம் அவிக்க ஆயத்தம் செய்கையில், சிவபாக்கியம் அரைகுறையாக விழித்துக் கொள்வாள். தவமணி தன்னருகே வந்து, தன்னைப் பரிவோடு பார்த்துவிட்டு எச்சிற்படிகத்தை எடுத்து வெளியே எறியப் போகும்போது, சிவபாக்கியம் தவமணி மீது அவளின் பழைய வாழ்வை நிறுத்தி ஒப்புமை பார்ப்பாள். அவ்வேளையெல்லாம் அவளின் நெஞ்சினுள் தணற்திரவக் குடம்

## குழந்தைகட்கு இயந்திர மனிதன்!

குழந்தைகளாற் தொல்லேயா? யப்பானிய நாட்டில் குழந்தைகளேப் பராமரிக்க ஒரு இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஒருவர் ஒலி வாங்கியினுட் (Microphone) கூறும் கட்டளேகளே, அவ்வியந்தர மனிதன் திருப்பிக் கூறிவிட்டு அவ்வாறே செய்யும். எத்திசையும் இயங்கும் தன்மையுடையது.

கவிழ்வதுபோல மனம் வேகித்துன்புற்று எரியும்.

இடியப்ப நூல்போல நீளும் எண்ணங்கள் ஒன்றினுள் ஒன்று இழைகையில் மனதினுள் தனிமையின் துயரம் தலேயிற் கைபதித்து நீண்ட நேரம் புலம்பும்.

அதுவே இமை மூடுகையில் கனவின் சொத்தி உருவங்களாய் ஏற்றித் தலே நிமிர்ந்து உள்மனதினுள்ளிருந்து வெளியே பாயும்.

என்ன வேகம்!

கந்தையாவின் தமக்கைதான் கனவின் மேடையிலும் அரக்கல் நடையுடன் தன் எதிர்ப்பட அவள் காணுகின்ருள்.

சிறிது தலேமயிருள்ள தலேயில் குடுகுடுவென்று ஊரும் பேனுக - கந்தையரின் தமக்கை செல்லம்மாவின் நினேவு அவளிற்கு எரிச்சலானது.

கழுத்தின் இரட்டைவடம் சங்கிலியோடு, உடலெல்லாம் தங்கச் சங்கிலிகள். வாயைத் திறக்கையில் தங்கம் மின்னுகின்றது.

''எங்கையடி அடைவு காசு... தோறையள் வாங்கேக்கை உள்ள உசார் தரேக்கை எங்கை போற?''

தும்பியாய் சீறும் குரல், கனவில் இராட்சத ஒலி.

இப்பொழுது, செல்லம்மா சிவபாக்கியத்தின் முன்.

"அவரிட்டைச் சொல்லி ஒழுங்கு செய்யிறன். நீ ஒரு சொல்லுச் சொல்லு''

படீரென்று நித்திரையிலிருந்து விழித்த பாக்கியத்தின் காதினுள் சுப்பிரமணியன் பாடும் தேவாரம் கேட்டது. அவ்வோசை இதயத்தினுள் வர்ஷித்த சாந்தியில் அவள் கைகள், அவளேயறியாமலே கும்பிட, நெஞ்சோடு இணேந்து குவிந்தன.

*　　*　　*

''அக்கா!''

குந்தில் உட்கார்ந்து பார்வதியுடன் கதைத்துக்கொண்டிருந்த தவமணி சுப்பிரமணியனின் குரலே நோக்கித் திரும்பினுள்.

வேட்டியை மடித்துச் சண்டிக் கட்டாய் கட்டிக்கொண்டு, கக்கத்துள் புத்தகத்தை இடுக்கியபடி பள்ளிக்கூடத்திலிருந்து வந்த சுப்பிரமணியனின் முகத்தில் இன்று வழக்கமான புன்னகை இல்லே.

தவமணி அவனேக் கேள்வி நிறைந்த கண்களோடு பார்த்தாள். படலேயைத் திறக்கின்ற பொழுதே தன்னே அழைத்துக் கொண்டு வரும் சுப்பிரமணியன், அழைத்த குரலில் அனுங்கிய தயக்கத்தில் அவன் ஏதோ தேவையை மனதினுள் கொண்டிருக்கிருன் என்பதை அவள் அறிவாள்.

''என்னெண்டு சொல்லன்? என்னத்தையோ மனதுக்கை வைச்சிருக்கிருய்?''

அவனின் மௌனம் உடைந்தது.

''இனி எல்லாரும் யூனிபோமிலே வரவேணுமெண்டு பள்ளிக்குடத்

சொல்லியாச்சு. வெள்ளைச் சேட்டும், நீலக் கால்சட்டையும் போடோணும். அல்லாட்டில் குற்றம் கட்டோணும் எண்டு பெரிய வாத்தியார சொல்லிப்போட்டார்''

அவள் மனம் அமுங்கிற்று. சலனம் காட்டாத முகத்தோடு கேட்டாள்:

''ரெண்டுக்கும் எவ்வளவு வரும்?''

"பத்து ரூவா எண்டான்ன வரும் புள்ளை''

பார்வதி பதில் சொல்ல, தவமணியின் முகத்தில் கவலை தொங்கிற்று.

'பத்து ரூபா!'

'இந்தப் பத்து ரூபா வாறதுக்கு ஒரு மாதமெண்டான்ன வேணும்!''

தவமணி ஒருமாத உழைப்பைத் தியாகம் செய்தால்தான் பள்ளிக்கூடத்திற்கு சுப்பிரமணியம் 'யூனிபோம்' அணிந்துகொண்டு போக முடியும்; பள்ளிக்கூடத்தில், அப்பொழுதுதான் அவனைப் படிக்க அனுமதி கொடுக்கப்படும்!

'இந்த மாச நயக்காசிலைதான் அம்மாவுக்கு மருந்தும், கூப்பனும் எடுக்க வேணும்!''

''எல்லாரும் ஒருமாதிரி உடுப்பிலை வந்தாத்தான் பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்கும் மதிப்புமொண்டு வாத்தியார் சொன்னவர். எங்கடை வகுப்பிலை நான் ஒருதன் மட்டுந்தான் இன்னும் வேட்டி கட்டிக்கொண்டு பள்ளிக்குடத்துக்குப் போறன்''

காதிற் செருகியிருந்த வதங்கிய சிதம்பரத்தம் இதழை, காது மடலிலிருந்துஎடுத்துக்கொண்டே அவன் தவமணியைப் பார்த்தான்.

தன் வறுமையைத் தானே நோகையில் தவமணியின் மனதிற்குள் பெரும் அனுக்கம். ஆனல் தன்னுடைய தம்பியை மற்றவர்களோடு மன அரங்கில் நிறுத்திப் பார்க்கையில் அவளுக்கு அவலை மேவிய கவலைதான். தன்னுடைய தம்பி வெள்ளையுடுப்பில் உத்தியோகம் பார்ப்பதைக் கனவு காணும் மனம், அவனுக்குப் பொருளளவில் நிறைவு காட்ட முடியாமைக்கு தன்னுள்ளேயே தலை மறைத்துக்கொண்டு புலம்புகின்றது.

'வழியத்ததுகள் ஒண்டுக்கும் ஆசைப்படேலாது போலை!'

மனம் பெருமூச்செறிகையில், பார்வதியின் சொற்கள் வெளியாகின்றன.

''ஏனும் புள்ளை யோசிக்கிறீர்? அப்பர் மிச்சம் மிச்சமாய் தந்த காசு என்னட்டைக் கொஞ்சம் இருக்குது; தாறன்''

சுப்பிரமணியத்தின் கவலையை அந்த வார்த்தைகள் மையினை ஒற்றும் தாளாகி வேகத்துடன் ஒற்றி எடுத்துக்கொண்டன.

'அம்மா திட்டுவா. ஒருநாளும் ஒருதருக்கும் கடமைப்படப்படாது!'

மனதினுள் மூச்சிட்ட அக்குரல், நெஞ்சிற்குள் பார்வதியின் சொற்கள் ஊடுருவுகையினுல் மங்கிக் கரைந்தன.

''நான் போயெடுத்துக் கொண்டிவாறனும்''

பார்வதீ... பார்வதீ...,

தவமணியின் பார்வையின் கனிவினுள், பார்வதியின் சொற்கள் பாஷையற்று பாஷையுடன் அங்கீகாரமாயின.

* * *

கழிந்த நாட்கள் நினைவில் வாசனை கமழ்கையில், சிவபாக்கி

யம் தன் கணவனோடு வாழ்ந்திருந்த வாழ்வினை மனதால் முகர்கின்றாள்.

எங்கோ தொடங்கும் நினைவு, வழிகளெல்லாம் மாறி, நேற்றிலும், இன்றிலும், நாளையைப்பற்றிய விச்னங்களிலும் சுற்றிச்சுழர மனதினுள் தெளிவை மயக்கும் பெருமூச்சுகள் பொங்குகின்றன.

திடீரென்று அவளின் நெஞ்சினுள்ளாகச் சீறிய இருமல், அவளை முடக்குமூளையின் நரம்புகளைத் தகர்க்க, நெஞ்சிளையமுக்கிக் கொண்டு முன்கவிழ்ந்து சறளியை வெளியே கக்கி, அதன் இளைப்பில் தலையினிற் கைபொத்தி, கண் வழியாகத் தணல் வழிந்தாற்போல், வலியின் குரூர இழுப்பு சுரீரிட அவள் வீரிட்டாள்.

''என்ரை பிள்ளையாரே... ஐயோ...''

அதுவே இருளாயும், வெளிச்சமாயும் இராட்டினமாட அவள் தன்னுணர்விழந்து பாயின்மேல் கவிழ்ந்து சரிகின்றாள்.

தவமணியின் கதறலில், அவளின் வீட்டு முற்றத்தில் கட்டி நின்ற மாட்டுக்கன்றும் துள்ளி எழுந்தது.

* * *

''மாமிக்கு தேத்தண்ணி வைக்கிறன் இருங்கோ...''

பாயிற் கிடந்த சிவபாக்கியத்தைப் பார்த்தபடியே இருந்த செல்லம்மா, தவமணியின் அழைப்புப் பிடியாததுபோல மூக்கை உறிஞ்சினாள்.

''ஓமோம்... உங்கடை தேத்தண்ணி குடியாத ஒண்டுதான் குறை. அதேன் இந்த எளியது வந்துநிண்டு பத்தியுக்கை பதுங்குது?''

செல்லம்மாவின் வார்த்தைகளால் பார்வதியின் முகம் சுருங்கிற்று.

''முந்தியெண்டால் குறுக்குக் கட்டோடை கொட்டிலுகளுக்கை கிடந்தவை. இப்ப எங்களோடை சரிக்குச்சரி நிக்கினை. அவளவையடை சட்டையளையும் மினுக்குகளையும் அங்கை பாரன்...''

தவமணி அடுப்படிக்குள்ளிருந்து வெளியே வர, பார்வதி கடப்பைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தாள்.

சுப்பிரமணியம் மாட்டுக் கன்றை கிளுவமரத்தில் கட்டிவிட்டு மாட்டுக்கொட்டில் பக்கமாகச் சென்றான். வாய்க்குள் சொற்கள் பொரிந்துகொண்டிருந்தன.

'இவை தரவழியை வீட்டு வாசல் பக்கம் வர விடுகிறது பிழை!''

சிவபாக்கியத்தின் நெஞ்சைப் பீறி, ஓங்காளிப்பும் ஒலியுமாய் இருமல் மீண்டும் எழ, அவள் வயிற்றோடு கைகளை அமுக்கிக் கொண்டு அரைவட்டமாய் வளைந்தாள்.

—''டப்''

''இந்தாருங்கோ வாயைக் கொப்புளிச்சிட்டுக்குடியுங்கோ...'' தேத்தண்ணீர்ப் பேணியோடு சொற்களும் கீழிறங்கின.

''நிண்டு பேச நேரமில்லை. பரியாரியார் வீட்டுக்குபேகவேணும்''

குரலின் வேகம் போலவே செயலின் வேகம். நிற்கவுமில்லை. விறுவிறுவென்று நெற்றிவியர்வையை உள்ளங்கையால் அழுத்தி வழித்துவிட்டு முகம் கழுவுவதற்காக தவமணி விரைந்தாள்.

'வயதுக்கு மூத்தவைக்கு பணிஞ்சு நடக்காதவை?

செல்லம்மா கழுத்தைத் தடவும் பொழுது இரட்டைவடம் சங்கிலியில் கை தாமதிக்கின்றது. தன்னிடம் நகை அடைவு வைத்த பொன்னம்மாவிடம்போய் அவளை வட்டிக் காசிற்காகத் தாறுமாறாகத் திட்டவேண்டுமென்று காலையில் நினைத்த நினைவு, நெஞ்சினுள் புற்றிலெழும் பாம்பாகி மீண்டும் தலை நீட்டுகின்றது.

"பேசாமையிருக்கிறியள். ஏதேனும் அலுவல் இருக்குது போலை?"

சிவபாக்கியத்தின் குரல் தொய்ந்தது. பதிலிற்கு செல்லம்மாவின் குரல் கரகரத்து எழுந்தது.

"ஓ... உங்களைப் பற்றித்தான் யோசிக்கிறன்... நான் முந்தியே சொன்னனான். இப்படிக்கிடந்து கரைச்சல் பர்றதை விட, இந்தக் காணியை அவரிட்டை ஈட்டிலை குடுத்திட்டு, காங்கேசந்துறையிலை அவங்கடை ஆஸ்பத்திரியிலை போய்க்கிடந்திட்டா அவர் மாதா மாதம் வேண்டினதை உங்களுக்குத்தருவார்."

முற்றத்துக்கிளுவ மரத்தில் கட்டி நின்ற மாட்டுக்கன்று திடீரென்று கத்தியது.

"அம்மா...ய்ம்ம்..."

அந்த ஒலியின் வீறல் தன் நெஞ்சினுள் எழுந்து பரந்ததுபோல சிவபாக்கியத்தின் முகத்தில் வேதனை கனத்தது. கண்களுள், முன்பு கண்ட கனவொன்று மீண்டும் தோன்றிற்று.

கழுத்தில் இரட்டை வடம் சங்கிலியோடு உடலெல்லாம் தங்கச் சங்கிலி.

தும்பியாய் சீறும் குரல், உண்மையில் இராட்சத ஒலி.

செல்லம்மா!

"என்ரை ஐயோ, நான் ஒரு நாளும் சம்மதிக்கன்!"

சிவபாக்கியம் புரண்டு கொண்டு வீரிட்டாள். அவள் அலறலில் அவளைச்சுற்றி நின்ற அவளின் இரத்தங்கள் பயந்து நடுங்கின.

"என்ரை அம்மோ... என்ரை பார்வதீ..."

தவமணியின் குரல் எழுந்து அழியுமுன், பார்வதி கடப்பால் விழுந்து சிவபாக்கியத்தின் அருகாகச்சாய்ந்து சரிந்தாள்.

"என்னவும், கொம்மாவுக்கு என்னவும்? என்னரை புள்ளை, என்னைப்பாரணை... என்ரை ராசாத்தீ..."

அழும் குரலோடு சிவபாக்கியத்தின் முகத்தை பார்வதி தன் முகத்தோடு அழுந்திப்புதைத்துக் கொண்டு தேம்பினாள்.

சிவபாக்கியத்தினைச் சூழநின்று, தவமணியும், பார்வதியும், சுப்பிரமணியனும் நிலைகுலைந்து புலம்புகையில் அவ்வளவு நேரமும் சலனமற்றிருந்த செல்லம்மா, முகத்தினிற் கெம்பிய சினத்துடன் கெதியிற் தொங்கி எழுந்தாள். எழுந்த வீச்சில் சிவபாக்கியத்தின் முகத்தோடு புதைந்து புலம்பிய பார்வதியின் தலை மயிரை இருஞ்சியிழுத்து அவளை வெளியே தள்ளி, முதுகுச்சட்டையிற் கைவைத்து பளீரென்று இழுத்துக் கிழித்தாள். சொல்லற்ற நிமிஷங்களில் பார்வதியின் மேற்சட்டை கிழிந்து துண்டுகளாய்த் தொங்க, செல்லம்மா கடைசியாக அவளின் முதுகில் ஓங்கிக்குத்தி உதைந்து தள்ளினாள்.

நிமிஷங்கள் சாகுமுன் சொற்கள் சீறின.

"எளிய பறைநாய்... வீட்டுத் திண்ணையிலும் ஏறியிட்டீரோ?"

## கண்ணிருந்தும்...!

இன்று உலகில் ஒரு கோடி மக்கள் பார்வையிழந்து வாழ்கின்றனர். இதற்குப் பெரும்பாலும் காரணமாயுள்ள றக்கோமா(Trockoma) வியாதியை அழிக்கத் தென் ஆபிரிக்கா விஞ்ஞானிகள் அணிமையில் மருந்து கண்டு பிடித்துள்ளனர்.

''மாமீ...—''

,எங்கடை கஷ்டங்களையெல்லாம் உதவி செய்யிறவளுக்கு, ஒருநாளும் எங்கடை வீட்டு முத்தம் மிதியாதவ அடிக்கிறதும்... உதைக்கிறதும்... சனியன்!'

''மாமீ—''

மீண்டும் பார்வதியை உதையப் போன செல்லம்மா, தவமணியின் வீச்சான சொற்களில் கால் தடக்கினாள்.

''பார்வதியிலை இனித்தொட்டியளெண்டால்......''

குரல் நொண்டியாய் சுழர, ஆக்ரோஷம் முஷ்டி உயர்த்திற்று.

விடியக்காலமையெண்டோண்ணை எழும்பியோடிவந்து எங்களுக்கு பர்ர்வதிதான் எல்லா உதவியும் செய்யிற. இவையள் காசொண்டுக்காகத்தான் முறை கொண்டாடிக்கொண்டு வருகினை. ஊரை அம்பாளிக்கிறவை, தங்கடை நயத்துக்குத்தான் எல்லாம் செய்வினை'

நினைவு மனதினுட் சுழர, சுப்பிரமணியம் செல்லம்மாவைப்பார்த்தான்.

''என்னடி சொல்லிறாய் நாங்களும் அந்த எளியவளும் ஒண்டோடி?''

தன்னை மீறிய செல்லம்மாவின் ஆவேசத்தை சுப்பிரமணியம் மோதினான்.

''ஓம்... நாங்கள் ஒண்டுதான்... நீ ஒரு அரக்கி... வெளியிலை போ''

அவனதுகை படலையை நோக்கிக் குறி காட்டிற்று.

'காசுள்ளவை எண்டாப் போலை எங்களை நெடுக வண்டில் விடப் பாக்கினை...'

''ஓம்... நாங்கள் ஒண்டுதான்...''

பார்வதி அந்தச் சொற்களின் இதமான தடவலால் நிலத்திலிருந்து மெல்ல எழுந்தாள்.

செல்லம்மா இரத்தம் உறைந்து நின்றாள்.

பார்வதி, நெஞ்சைக் கைகளால் புதைத்து மூடிக்கொண்டு எழுந்து தவமணியின் கைத் தாங்கலுள் அடைக்கலமானாள்.

சிவபாக்கியம் காற்றின் இதத்தில் மெல்ல அசைந்து எல்லாக் கனவுகளும் குழம்பிப் பின்பு தெளிந்து அமைதி பெற்ற நிலையில் புரண்டாள். அழைக்க வேண்டும் போன்ற உணர்வில் மனம் உந்த, குரல் தடுமாறிற்று.

''பா...ர்வதீ!''

பார்வதி சிவபாக்கியத்திற்கு அருகாக வந்தாள். அவள் தவமணியின் வெளுத்த சட்டையைப் போட்டிருந்தாள்.

செல்லம்மா இறங்கிய முகத்துடன் வெளியே நடந்தாள்.

சுப்புரமணியம், தான் பழகியோரிடம் பயின்ற சொற்களைத் தன்னையறியாமலே சொல்கையில் செல்லம்மாவின் ஆங்காரம் முகத்தினின்று கழன்றாலும் நெஞ்சினுள் அது படையாகவே இறுகிக்கிடந்தது.

''மாமீ... முந்தியைப் போலை இனி ஊரை வெறுகேலாது .. சனத்துக்கு இப்ப விஷயம் விளங்கும்.''

# நிகரற்ற நெசவுத் தொழில்

— க. ஆனந்தக் குமாரசாமி —

தொழில் நுட்ப உதவியாளர் — Technical Assistant (Cyntex Ltd.)

"செய்யும் தொழில் எல்லாம்
சீர்தூக்கிப் பார்க்கின்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை."

என்பதை வளர்ந்துவரும் நெசவாலைகளும், மற்றும் தடிசைக் கைத்தொழில்களும் எடுத்துக்காட்டுகின்றது. இவ்வளவு காலமும் நமது மானத்தைக் காப்பாற்ற வேறு நாடுகளை நம்பியிருந்த நாம் இனிமேலாகுதல் நமக்குத் தேவையான பொருட்களை நாமே தேடிக் கொள்ள வேண்டும் என்ற சுதந்திர தாகம் பிறந்தது நம் ''இலங்காதேவி'' செய்த தவம் என்றே கூறவேண்டும்.

பழைய கற்காலத்தை நோக்கும்போது உடைக்குப் பதிலாக ஆதி மனிதர்கள் இலை குழைகளைத் தம் உடலைக் குளிரில்இருந்து காப்பாற்றுவதற்கும்-உறுப்புக்களை மறைப்பதற்குமாக உபயோகித்தனர். சிலர் மிருகங்களின் தோலையும் ஆடையாகப் பாவித்தனர். பின் புதிய கற்காலத்தில் புல்நார்களைப் பின்னி அதை உடையாகப் பாவித்தனர்.

திரிமனையில் பருத்தியை அரைத்துப் பஞ்சு வேறு கொட்டை வேறாகப் பிரித்துக் கையினால் நூல் நூற்றுக் கைத்தறியில் துணி நெய்து இந்தியர் நெசவுக்கலையை வளர்த்தனர். ஆட்டு ரோமத்தை விட இந்தியாவில் வளரும் ஒரு வகைச் செடியில் இருந்து தயாராகும் துணியை இந்தியர் முக்கியமாகப் பயன்படுத்தினர், என 2,300 ஆண்டுகளுக்கு முன் (Hero Dotus) என்ற கிரேக்க வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். மெல்லிய மஸ்லின் துணி முதல் தடித்த துணி வரையில் உற்பத்தியாயின என அவர் குறிப்பிட்டுள்ளார். இக்கலை இந்தியாவில் இருந்துதான் 10-ம் நூற்றாண்டில் சீனாவுக்கும், 14-ம் நூற்றாண்டில் இத்தாலிக்கும், 17-ம் நூற்றாண்டில் அமெரிக்காவுக்கும், பின் பாரசீகம் எகிப்து மற்ற நாடுகளுக்கும் பரவியதாக வரலாறு சான்று பகருகின்றது.

5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மொகஞ்சதாரோ காலத்திலேயே இந்தியாவில் நெசவுக்கலை ஆரம்பமாகிவிட்டது என்பதற்கு அத்தாட்சியாக இந்தியாவில் பளிங்குகளாலும், சங்கினாலும், களிமண்ணாலும் செய்யப்பட்ட கதிர்கள் கண்டுபிடிப்பு சான்று பகர்கின்றது. அது மட்டுமல்லாமல் 20-ம் நம்பர் தொடக்கம் 40-ம் நம்பர் வரை நெய்யப்பட்ட துணிகள் — வேதங்கள் மூலமாகவும், இறைவனின் ஆடைகள் மூலமாகவும் அறியக் கிடக்கின்றது. அத்துடன் கி.மு. 800ல் எழுதப்பட்ட மனுநீதிச் சட்ட நூலில் 10-ம பலம் நூல் வாங்கும நெசவாளி 11பலம் நூல் தரவேண்டும் என உள்ளது. அக்காலத்திலேயே பசை (Sizing) போடவும் ஆரம்பித்துவிட்டார்கள் என்பதையும் இராமாயணமும் பாரதமும் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வித ஆரம்பகாலத்திலேயே ஏற்றுமதியான டக்கா மஸ்லின் (Dacca muslin) முதன்மையாக இருந்தது இதுதுணிகளில் மிகச் சிறந்த சித்திரவேலைப்பாடமைந்த சித்திரங்களைக் கடதாசியில் வரைந்து பாவு நூலின் கீழே வைத்து அதே வடிவம் துணியில் வருமாறு நெய்தனர். ஔரங்கசீப் என்னும் அரசன் தன்னுடைய மகள் ஏழு மஸ்லின் துணிகளை

உடுத்துக்கொண்டு அரச சபைக்குள் நுழைந்தபோது மகளின் உடல் துணி ஊடே தெரிவது கண்டு மகளைக் கடிந்தார். 20 கஜ நீளமும் 1 கஜ அகலமுமுள்ள மஸ்லின் துணியை மோதிரத்துள் வைக்கக்கூடியதாக அவ்வளவு மென்மையாக ஆறு மாத காலத்தில் நெய்தனர். 40கஜ நீளமுள்ள மஸ்லின் துணியை வேலைப்பாடு நிறைந்த தேங்காய் ஓட்டுக்குள் வைத்து விக்டோரியா மகாராணிக்கு (Queen Victoria) அனுப்பிய வரலாறும் ஆதிகால நெசவின் வளர்ச்சியை எடுத்தியம்புகின்றது.

இவ்வித வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்ட ஆங்கிலேயராலும் - தொழில் புரட்சியாலும் நூற்பு நெசவு இயந்திரங்கள் மேனாட்டில் தோன்றி வளர ஆரம்பித்தது. முதல் இரண்டாவது உலகயுத்த சமயத்தில் இந்தியாவில் ஆலைகள் தோன்ற ஆரம்பித்தது. 1918ல் கல்கத்தா அருகில் உள்ள குளஸ்டர் கோட்டையில் இந்திய பஞ்சாலை முதன்முதல் ஆரம்பமாகியது. இவ்விதமாக இந்தியாவில் வளர்ச்சியடைந்த நெசவுக்கலை இன்று 500 ஆலைகளைத் தன்னகத்தே கொண்டு சுமார் 14லட்சம் மக்களுக்கு வாழ் வளித்துள்ளது பாரததேவி!

இவ்விதமாக நம் அண்டை நாடாகிய தாய்நாட்டிலும் வளரத் தொடங்கியது. 2000 ஆண்டுகளுக்கு முன்பதாகவே கைத்தறி (Handloom) நெசவு ஆரம்பமாகி விட்டது என்பது, குவேனி, விஜயன் இலங்கைக்கு வந்த சமயம் நூல் நூற்றுக்கொண்டிருந்த வரலாறு ''உள்ளங்கை நெல்லிக்கனியாக சான்று பகருகின்றது. அது மட்டுமல்லாமல் வீரத்தமிழ் பரம்பரை அக்காலத்திலேயே வாழ்ந்தன என்ற சரித்திரபூர்வமான உண்மையையும் எடுத்தியம்புகின்றது.

இலங்கையில் முதன்முதல் மின் தறியை நோக்கும்போது 1889-ம் ஆண்டளவில் (Messers Darley Butler & Co.) என்ற கம்பெனி ஜெர்மனியரால் வெள்ளவத்தையில் 232 தறிகளுடனும், 32 கதிர்களுடனும் 500 தொழிலாளர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை இன்று சுமார் 800 தறிகளுடனும், 28,000 கதிர்களுடனும் சுமார் 3000 இலங்கையர்களுக்கு வாழ்வளித்துள்ளமை நம் நெசவின் வளர்ச்சியை மட்டுமல்லாது நாட்டின் வேலையில்லாத திண்டாட்டமே எவ்வளவு தூரம் நிவர்த்தியாக்கப்பட்டுள்ளது. என்பது தெளிவு. ஒரு ஆலையின் வளர்ச்சியைக் கண்டு மற்றவர்களும் தங்கள் விடாமுயற்சியால் ஒருசில இடங்களில் சிறுகச்சிறுக ஆரம்பித்தனர். இன்று அரசாங்கமே சுமார் ஏழு ஆலைகளுக்கு இடம் கொடுத்துள்ளது; ஆட்சியாளர் மூலப்பொருட்களும் உபகரணங்களும் (Raw material and machinery) பிற நாட்டில் இருந்து வ வழைப்பதற்கு போதிய வசதி கொடுப்பதுடன் சாதி, மதபேதமின்றி சகல மக்களுக்கும் குறிப்பாக வெவ்வேறு தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்கு பல்வேறு விடயங்களிலும் உதவி புரிவார்களேயாயின் நம் நாட்டில் வறுமையேது? வேலையில்லாத் திண்டாட்டமேது? பஞ்சமேது?

பஞ்சாலைக்கு பருத்தி மிக முக்கியமானது. பருத்திக்கொட்டையைச் சுற்றிலும் உரோமம்போல வளரும் பஞ்சானது, பருத்தி நன்கு விளைந்ததும், காய் வெடிக்கும்போது பஞ்சு வெளிப்படுகின்றது.

செடியில் இருந்து கையினாலோ, எந்திரங்களைக் கொண்டோ பருத்தி எடுத்து, உலர்த்திஅரைத்துப் பஞ்சு வேறு கொட்டை வேறாகப் பிரிப்பார்கள். துசும்பு நீளம், நிறம் தூய்மை முதிர்ச்சி முதலிய பல அம்சங்களைக் கொண்டு பஞ்சு

விலை நிர்ணயிப்பார்கள். பஞ்சை அழுத்தி பேல்களாக்கி (Bale) பஞ்சாலைக்கு அனுப்புவர்.

எந்திரங்களைக்கொண்டு பஞ்சு பேல்களைப் பிரித்து சீராகக் கலந்து தூய்மையாக்கித் தேவையான தடிப்பு, அகலமும் பளுவுமுள்ள பாய் (Lap) வடிவில் பஞ்சைப் பெறுவர். ஓர் எந்திரத்தில் இருந்து மற்ற இயந்திரத்துக்குச் செலுத்தக் காற்று அழுத்தச் செலுத்தி (Pneumatic Conveyors) பயன்படுகிறது. பின் பஞ்சுப்பாய்களை பஞ்சு வெட்டும் இயந்திரத்தில் இடுவர். பஞ்சில் எஞ்சியிருக்கும் லேசான அழுக்குகளை நீக்கி பஞ்சுத் துசும்புகளைத் தனித்தனியாக பிரித்து அவற்றை இளையாக்கித் தொடர்ச்சியான பட்டைகளாக்குவது (Sliver) பஞ்சு வெட்டும் இயந்திரத்தில் நடைபெறும். தொடர்ச்சியான பட்டையை உருளை வடிவான பெரிய பாத்திரத்தில் சிக்கலின்றி சேமித்துவைப்பர்.

சாதாரண நூல் நூற்பதானால் மேற்கூறிய பட்டைகளை இழுக்கும் சட்டங்களில் (Drawing frame) செலுத்துவர். இதில் 6 பட்டைகளை ஒன்றாகச் செலுத்தி முறுக்கேற்றி ஒரே சீராகவும் படிப்படியாக மெல்லியதாகவுமுள்ளதாகப் பன்முறை இழுத்துக் கடைசியில் தேவையான எண் நூலைப் பெறுவர். மெல்லிய நூல் நூற்கவேண்டுமானால் பட்டையில் உள்ள குட்டையான துசும்புகளை நீக்க வேண்டும். பட்டைமடி(Sliver lap)நாடா மடி (Ribon lap) முதலியன உள்ள சீப்பு போன்ற இயந்திரங்களில் (Combing machine) பட்டையைச் செலுத்தி குட்டையான துசும்புகளைப் பிரித்துவிடுவர். இச்செய்முறையால் கிட்டத்தட்ட 20 சதவீதம் கழிவு ஏற்படுகிறது. ஒரே சீரான நீண்ட துசும்புகள் மட்டுமே பட்டையில் இருப்பதால் அதைக்கொண்டு ஒரே சீரான மெல்லிய நூல் நூற்க முடியும்.


## உலகிலேயே மிகப் பழமையான அரச வம்சம் எது?



உலகிலேமே மிகப் பழமையான (2625 வருடங்கள்) அரச குடும்பம் ஜப்பானிய அரச வம்சம்தான் யப்பானியர்களின் முதற் சக்க்ரவர்த்தியாகிய ஜிம்மு டென்னா என்பவன் கிறித்துவுக்கு முன் 660-ம் ஆண்டு மாசி மாதம் 11-ந் திகதி அரியாசனமேறினான். அன்று தொடக்கம் இன்றுவரையில் அம்மன்னனின் நேர்சால் வழியில் வந்தவர்களே தொடர்ந்து அரசாட்சி செய்கின்றனர். இன்றைய மன்னர் ஹீரோ ஹீற்றோ அந்தக் குடும்பத்தில் 124-வது சக்கரவர்த்தியாவர். முதற் சக்கரவர்த்தியாகிய ஜிம்முடென்னா சூரியனினின்றும் உதித்ததாக யப்பானியர் நம்புகின்றனர். ஜப்பானில் சூரியனைப் பெண்பாலாகக் கருதுகின்றனர்.

தடித்த பட்டையானது இழுக்கும் சட்டகத்தில் பலமுறை இழுபட்டு அதன் தடிப்பு படிப்படியாக குறையும். கடைசியில் கிடைக்கும் மெல்லிய புரிபோன்ற பட்டையை நூற்கும் இயந்திரத்தில் (Spinning frame) இடுவர். இந்த இயந்திரத்தில்தான் தேவையான எண் நூல் உருவாகி, ஏற்ற பலம் உண்டாகும் வரையில் முறுக்கு ஏற்படும். நூலை கூம்பு (Cone) வடிவம் அல்லது தார் குழல்களில் (Bobbin) சுற்றுவர்.

## இரு சமுத்திரங்கள்!



பசிபிக், அத்லாந்திக் ஆகிய இரு சமுத்திரங்களை ஓரிடத்திலிருந்து பார்க்க முடியுமா? அமெரிக்காவிலுள்ள கோஸ்ராறிகா நாட்டிலுள்ள இராஷு மலையுச்சியில் (Mount Erazu) நின்று பார்த்தால் மேற்கே பசிபிக் மகா சமுத்திரத்தையும், கிழக்கே அத்திலாந்திக் மகா சமுத்திரத்தையும் காணலாம். இந்நாட்டின் தலைநகரான சான் ஜோஸ் அத்லாந்திக்கிலிருந்து 103 மைல் தூரத்திலும், பசிபிக்கிலிருந்து 72 மைல் தூரத்திலுமுள்ளது.

இவ்வாறாகத் தயாரிக்கப்பட்ட நூல்களைக் கொண்டு பாவு (Beam) தயாரிப்பர். நெய்ய வேண்டிய துணியில் அகலம் வகை ஆகியவற்றிற்கு ஏற்ப எத்தனை நூல் பாவில் வேண்டுமோ அதற்கேற்ப நூல்களை பாவுச் சட்டங்களில் (Creels) ஒழுங்கு செய்து ஒரே பாவாகத் தயாரிப்பர். இவ்வாறு தயாரான பாவுகளை பசைக் கலவையினூடே (Sizing) செலுத்தி உலர விட்டு நூல் துகும்புகளைச் சிதற விடாது ஒன்று சேர்த்து பலம் ஏத்துவர். இதனால் நெசவின்போது நூல் அறுவண்ணம் பாதுகாக்க ஏதுவாகும். பசை போட்ட பாவுநூலை 1000 முதல் 1500 கஜம் வரையில் நெசவுச் சட்டத்தில் (Weaver's beam) சுற்றுவர். நிமிஷத்துக்கு 500 கஜ வீதம் பாவு போடக்கூடிய இயந்திரங்களும் உள்ளன. பசை போட்ட நூலை நீராவியால் சூடேற்றப்பட்ட உருளைகளைச் சுற்றி நூலை அனுப்பி உலர வைப்பர். அல்லது வெப்பமிக்க காற்றினூடே செலுத்தியும் உலர வைப்பர். பசைக்கலவை தயாரிக்க மரப்பொருட்கள், தொற்று நீக்கிகள் (Antiseptics). கசியும் பொருட்கள் (Deliquescent), மென்மையாக்கிகள் (Softners), எடையூட்டிகள் (Weights) முதலியன பயன்படுகின்றது.

இவ்வாறு பசையூட்டப்பட்ட பாவுகள் பின் விழுதுக்கோர்வைக்காக (Drawing Department)க்கு அனுப்பப்படுகின்றது. இங்கு தேவையான விதத்துக்கேற்ப நூல்களை விழுதுகளிலும் (Healds); பன்னைகளிலும் (Reed) வாங்குவார்கள். துணி என்னமாதிரி காட்சி கொடுக்க வேண்டுமோ அதற்கேற்ப மாதிரியை கிராவ் பேப்பரில் (Graph paper) அடையாளம் செய்து அதற்கேற்ப நூலை விழுதுகளிலும்; பன்னைகளிலும் வாங்குவர். பின் அதற்கேற்ப டொபியிலும் (Dobby) மாதிரி மாலைகள் மூலமாக குறிப்பிட்ட மாதிரியை துணியில் காட்சி கொடுக்க முயற்சிப்பர். இவ்விதமாக (Designs) சித்திர வேலைப்பாடுகள் போடுவதற்காக வெவ்வேறு சிறு இயந்திரங்கள் உண்டு. அவை முறையே (Tappets, Dobby, Zacquard) என அழைப்பர்.

இவ்வித வேலைப்பாடமைந்த தறிகளில் (Looms) துணி நெய்யப்பட்டு பல்வேறு தீர்ப்பு வேலைகளுக்கு அனுப்பப்படுகின்றது. துணி கண்ணுக்கு நல்ல தோற்றம் அளிக்கும்படி செய்தலும், எதற்கு அத்துணி வேண்டப்படுகின்றதோ

அதற்கு அத்துணியை தகுதியுடையதாகச் செய்தலும், சலவை செய்த அல்லது சாயம் போட்ட துணிகளில் சுருக்குகளை நீக்கி, சுருங்கிய அகலத்தைக் கூடுமான வரை மீளவும் பெறுதலும், துணியை வேண்டிய அளவுக்கு விறைப்பாகவும், மிருதுவாகச் செய்தலும் இவற்றுட் சிலவாகும். சில தீர்ப்பு வேலை முறைகளால் துணியின் தோற்றமும், பரிசத்தால் உணரக்கூடிய தன்மையும் முழுதும் மாறிவிடுவதன்றி அம்முறைகளுக்குப் பிறகுதான் துணியின் உண்மையான தோற்றம் காட்சி கொடுக்கின்றது.

மேற்கூறிய தீர்ப்பு வேலைகள் முடிந்ததும் துணியை மேலும் கவரச் செய்வதற்காக பல்வேறு உருவங்களை அச்சடிப்பதற்கும், பல்வேறு வர்ணங்களையும் தீட்டி மக்களின் கண்களையே! ஏன் மனத்தைக்கூட கவர்ந்துவிடுவர்.

இவ்வித கவர்ச்சிமிக்க தொழிலைப் பாராட்டினால் மட்டும் போதாது. இதில் ஊக்கம் உள்ளவர்களை அரசாங்கமும் மற்றும் பணம் படைத்த பேர்வழிகளும் கைகொடுத்து உதவுவார்களேயாயின் நாம் அண்டைநாட்டுத் துணிகளை நம்பியிருக்க வேண்டிய அவசியமும் ஏற்படாது. வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவிற்கு நீங்கி இலங்கை மாதா சுபீட்சப் பாதையில் முன்னேறுவாள் என்பதில் சந்தேகமில்லை. வறுமையினால் ஏற்படும் கொலை பாதகங்களும் குறையும் என்பது வெள்ளிடை மலை.


*With the Compliments*

*of*

**HENDERSON & CO., LTD.**

**Colombo-2.**

*Distributors:*

**YOKOHAMA**

*Tyres & Tubes*

*for Cars, Trucks, Tractors & Moter cyeles.*

PHONE: 2218

# புதிய உலகம்

— நல்லை அமிழ்தன் —

சேவற் கோழி கூவின
செம்மை மலர்கள் மலர்ந்தன
கோவில் மணிக ளார்த்தன
குமுதம் குளத்தில் முகிழ்த்தன
பூவில் தென்றல் தவழவே
பொய்கை கமலம் அவிழ்ந்தன
தாவிப் பரிதி வந்தனன்
தங்க ஒளியைத் தந்தனன்.

ஏரியிலே ஒளி படர்ந்திட
எழுந்து காகம் கரைந்தன
வாரி அலையும் ஆர்த்தன
வண்டு பாடல் யாத்தன
கூரிய இருளும் குலைந்தது
குயிலும் இசையைக் கொடுத்தது
பாரில் இன்பம் பரவுது
பண்பும் எங்கும் ஒலிக்குது.


ஆழியிற் கலங்கள் மிதந்தன
ஆறுகள் தேனாய்ப் பாய்ந்தன
கழனியி லுழவர் நின்றனர்
கதிரின் சிரிப்பை பார்த்தனர்
விழியைத் துடைத்தே சிறுவர்கள்
விரைந்து துயிலில் எழுந்தனர்
பழைய துயரம் ஒழித்தனர்
பரிதி முன்னே விழித்தனர்.

கவிஞர் செய்யுள் யாத்தனர்
கலைஞர் இசையை மீட்டனர்
சிறுவர் பள்ளி சென்றனர்
சேர்ந்து புட்கள் பறந்தன
வறுமை யொழிக்கும் பூமியில்
வளர்ந்த பயிர்கள் சிரித்தன
பொறுமை கொண்ட மக்களும்
புதிய உலகைப் பார்த்தனர்.

# ஒரு முதலீட்டு வங்கி

—சி. லோகநாதன்—
பொது நிர்வாகி — இலங்கை வங்கி
(General Manager, Bank of Ceylon)

[ சனநாயக அமைப்பினுள்ளே விரைவான பொருளாதார அபிவிருத்தியேற்படுத்த ஒரு திட்டம் ]



அபிவிருத்திச் சேமிப்பு வங்கியெனும் நிறுவனத் திட்டம் முக்கியமாக சனநாயக சோஷலிசக் கொள்கையில் நம்பிக்கையும், அதனை அடைவதற்கு மிகவும் முயற்சி செய்யும் ஆசியநாட்டு ஆட்சியாளரதும், அரசியல் கட்சிகளினதும் பரிசீலனைக்காகவே அமைக்கப்பட்டுள்ளது.

சனநாயக அமைப்பின் மிகவும் இன்றியமையாத தேவை பொருளாதார விஸ்தரிப்பாகும். அரசினரது அல்லது சிறு முதலாளித்துவ வகுப்பினரது கைகளிலே பொருளாதார அதிகாரம் ஒன்றுசேர இடம் கொடுக்கப்படுவதில்லை. அவ்வாறாயின் மக்கள்துறை என அழைக்கத்தக்கதும், பொதுமக்களை பிரதிநிதித்துவம் வகிக்கத்தக்கதுமான பரந்த தனியார்துறை சனநாயக அரச அமைப்பின் ஒரு முக்கிய அம்சமாகின்றது.

மக்கள்துறையினை அபிவிருத்தி செய்யும் பிரச்சனைக்கு மிகவும் எளிதாகத் தீர்வுகாண முடியாது. சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் பொருளாதார வளம் வரையறுக்கப்பட்டுள்ளது. அதனால் அம்மூல வளங்களைப் — பொருளாதார அபிவிருத்திக்குத் திறம்பட உதவத்தக்கதாகவோ அல்லது ஒருமைப்படுத்தக்கூடிய பிரிவுகளாகவோ மக்களிடையே பிரித்துக் கொடுக்கமுடியாது. நன்கு வளர்ச்சிபெற்ற நவீன கூட்டு முதல் அமைப்புமுறை, சிறு பங்காளிகளது நலனைப் பாதுகாத்து சமமாக வளத்தைப் பிரித்துக் கொடுப்பதுடன் அதே நேரத்தில் மூலவளங்களையும் திறமைமிக்க குழுக்களாகப் பிரித்துவிடுகின்றது.

கூட்டு முதல் அமைப்புமுறை சிறு பங்காளிகள் பாதுகாப்புகளுடன் பலவித பொருளாதார முயற்சிகட்கு தனியுரிமைபெற்ற ஐக்கிய ஸ்தாபனங்களை ஏற்படுத்துமானால், அவற்றின் பங்காளிகள் போதிய வாக்குரிமையுடன் பொதுமக்கள் தம் எல்லாப் பகுதியினரையும் குறுக்கு வெட்டு முகமாக அடக்குமாயின், ஓரளவுக்குப் பொருளாதார அதிகாரம் விஸ்தரிக்கப்பட்டுவிட்டதெனலாம். எனினும் உடைமையில் சமநிலை அடைந்துவிட்டதாகக் கூற முடியாது. அபிவிருத்திச் சேமிப்பு வங்கித் திட்டத்தின் முக்கிய அம்சமாக இக்கூட்டு முதல் அமைப்புமுறை அமையும்.

கூட்டுறவு அமைப்பு முறை மூலமும் பொருளாதார அதிகார விஸ்தரிப்பை ஏற்படுத்தலாம். பொது அக்கறைகளையுடைய, மக்களது தூண்டுதலற்ற ஐக்கிய நிறுவனங்களது விஸ்தரிப்புக்கு எதுவித எதிர்ப்பும் இருக்கக்கூடாது. இத்தகு உற்பத்தி, விநியோக கூட்டு நிறுவனங்கட்கு, ஆட்சியாளரது உதவியும் இருக்கவேண்டும். ஆனால் ஆசியாவிலோ, ஆட்சியாளரது கட்டுப்பாட்டினை, கூட்டுறவு நிறுவன அமைப்பு முறையினால் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பங்குகளை மாற்றுதல், இலாப விநியோகம் ஆகியவற்றிலுள்ள கட்டுப்பாடுகளினால், கூட்டுறவு நிறுவன அமைப்பு முறை அதிக உற்பத்திக்குத் தூண்டுதல் அளிப்பதில்லை. சோஷலிச நாடுகளில் கூட்டு முறைப் பண்ணை விவசாயம், உற்பத்தி ரீதியில் பெரும் தோல்வியென புள்ளிவிபரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்வதில் மட்டுமே அவர்கள் வெற்றி கண்டுள்ளனர். உற்பத்தி, விநியோக பொருளாதார துறைகள் பலவற்றிற்கு கூட்டு முதல் அமைப்பு முறையே உகந்ததாகும்.

அபிவிருத்திச் சேமிப்பு வங்கி, குறைந்த வருமான வகுப்பின் வருவாயின் ஒரு பகுதியினை முதலீட்டிற்கு மாற்றும். இம் மாற்றத்தை ஓரளவு நிதி சம்பந்தமான தூண்டுதல் மூலமும், போதனைகள் மூலமும் ஏற்படுத்தலாம். முதற்கண்ணோட்டத்தில் இவை அரசினரால் பலாத்காரப் படுத்தப்படுவதாகத் தோன்றினாலும் உண்மையில் அவ்வாறில்லை. பொருளாதார, அரசியல் அதிகாரங்களையுடையவரும் பொதுமக்களைக் குறுக்கு வெட்டு முகமாகப் பிரதிநிதித்துவம் வகிக்கத்தக்கவரும் எதுவித கட்டுப்பாடுமற்று உற்பத்திக் காரணிகட்காகத் தத்தமக்கிடையே போட்டியிடுபவரையுமுடைய சோஷலிச ஜனநாயகமே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் மூலம் அவர்கள் விலைப் பொறியின் நன்மைகளைப் பெறுவதுடன் சமுதாய நலன் கருதி உற்பத்திக் காரணிகளையும் உபயோகிக்க முடிகின்றது. சேமிப்பு வங்கி அபிவிருத்தித் திட்டமானது சமுதாயப் பாதுகாப்புத் திட்டம், சேமிப்பு வங்கி, பொறுப்பாட்சிக்குழு ஆகியவற்றின் அம்சங்களைக் கொண்டுள்ளது. அத்துடன் இத்திட்டம் அபிவிருத்தி அடையா நாடுகள் சனநாயகத்தின்மூலம பொருளாதார அபிவிருத்தியும் சமூகநீதியும அடைவதற்கும உதவும்.

## பகுதி 1

### அபிவிருத்திச் சேமிப்பு வங்கித் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள்:

ஆசியாவை மாபெரும் உடனடிப் பிரச்சனைகள் எதிர்நோக்கியுள்ளன. சர்வாதிகார முறைகளைக் கையாளாது புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகள் எவ்வாறு பொருளாதார சமுதாய அபிவிருத்தியினை ஏற்படுத்தலாம்? அவற்றை நிறைவேற்றுவது மற்றொரு பிரச்சனையாகும்!

ஆசிய நாட்டுத் தலைவர்களுள் பலர் தாராள கொள்கை மரபில் வந்தவர்கள் ஆனபடியால் மனிதனுக்காகவே அரசு இருக்கின்றதேயொழிய அரசுக்காக மனிதன் இருப்பதில்லை என்பதில் நம்பிக்கையுடையவர். அதனால் அவர்கள் தத்தம் இலட்சியங்களை அடைவதற்கு சனநாயக வழிகளையே கையாள்வதை விரும்புகின்றனர். அத்துடன் உண்மைச் சனநாயக சமுதாயத்தைத் தமது நோக்கங்களுள் ஒன்றாகவும் வைத்திருக்கின்றனர்.

அவர்கள் தோல்வி தரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனரா?

இலட்சிய சனநாயகக் கொள்கைகளை உதறித்தள்ளாது ஒருசில வருடங்களுள் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படுத்த முனைவது ஒரு உருப்படாத முயற்சியா?

செல்வம் உள்ளோருக்கும் இல்லாதோருக்கும் உள்ள வேறுபாட்டினை, எல்லா அதிகாரங்களையும் ஆட்சியாளரது கையில் ஒருமைப்படுத்துவது மூலமாகவோ அல்லது அடக்குமுறை சட்டங்களின் மூலமாகவேதான் குறைக்கப்படலாமா?

## பொருள் உள்ளோரும் இல்லாதவரும்?

இதுதான் பிரச்சினையின் மையமாகும்?

பல ஆசிய நாடுகளில் அரசியல் அதிகாரத்தின் விஸ்தரிப்பு ஏற்பட்டுவந்துள்ளது. இது வாக்குரிமை மூலம், அரசியல் அதிகாரங்களையுடைய பெரும்பான்மைச் சலுகையற்ற மக்களுக்கும் பொருளாதார அதிகாரங்களையுடைய சலுகைபெற்ற சிறுபான்மை மக்களுக்கிடையே ஒரு போராட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வேறுபாட்டினை, அச் சிறுபான்மையினரிடமிருந்து பொருளாதார அதிகாரங்களை எடுத்து ஆட்சியாளரினது கைகளில் கொடுப்பதன் மூலமே இப்போராட்டத்திற்கு ஒரு முடிவு காணலாம். சனநாயக உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாவித்து சனநாயகத்தின் அத்திவாரத்தையே அழிப்பதற்கு அடிகோலும் சர்வாதிகார அரசியல் கட்சிகளிடமிருந்தே இத்தீர்வை ஏற்கும்படி வற்புறுத்தல் ஏற்பட்டு வந்துள்ளது. இம்முறை அரசியல் அதிகாரங்களையுடைய, ஆனால் பொருளாதார அதிகாரமற்ற ஆசிய மக்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாகவுள்ளது. அதனால் அவர்களை, விரக்திகாரணமாகத் தொழில்,

## சூரியனும் அழகு சாதனம்

இங்கிலாந்தில் சூரியவொளிக்குப் பஞ்சம். அதனால் செயற்கைச் சூரியவொளியை இரண்டு நிமிடம் முதல் ஐந்து நிமிடம் வரை உடலுட் செலுத்தும் ஒரு இயந்திரம் (Sola rota) கண்டுபிடிக்கப்பட்டுளது. சதத்தினால் இயங்கும் இவ்வியந்திரம் ஒரு அழகு சாதனமாக அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது.

வர்த்தகம், விவசாயம் ஆகிய துறைகளில், தனியார் துறையினைத் தேசியமயம், அபகரித்தல் மற்றும் பொருளாதார சம்பந்தமான சட்டதிட்டம் மூலம் அழித்து பொது உடைமையின் விஸ்தரிப்பை வேண்டி வாக்களித்துப் போராடத் தூண்டுகின்றது. இந்தகைய எச்சரிக்கை தரும் செய்கைகள் ஆசியாவிலே அதிகரித்து வருகின்றன!

தனியார் துறையின் அழிவினைத் தொடர்ந்து மரபுவழிச் சனநாயக உரிமைகளின் அடக்குமுறை ஏற்படும்.

## ஒவ்வொருவரும் முதலீடு செய்பவரே!

இந்நெருக்கடியான நிலைக்கு வழியென்ன? பிரஜைகளுக்கு போதியளவு பொருளாதார நன்மைகளையும், பொறுப்பையும் கொடுப்பதன் மூலமே இதற்கொரு முடிவு காணலாம். அவ்வாறு கொடுப்பதன் மூலமே அவர்கள் அரசியல் அதிகாரத்தினையும், சுதந்திரத்தினையும் போதியளவு பகுத்தறிவுடனும், பொருளாதார நலன் கருதியும் உபயோகிப்பர். இதன் மூலம் தனியார் துறை பெருகுவதற்கு ஒரு தகுந்த சூழ்



எது எடை கூட? ஒரு றாத்தல் பஞ்சா? ஒரு றாத்தல் தங்கமா? இரண்டும் ஒரே நிறையாகத்தானே இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்! தவறு. ஒரு றாத்தல் பஞ்சு ஒரு றாத்தல் தங்கத்திலும் பார்க்க எடை கூடத்தான் இருக்கும். ஏனென்று தெரியுமா? பஞ்சு அவெர்டு பொயிஸ் (Avoird pors) நிறை முறையில் நிறுக்கப்பட்டு 33 றாத்தலுக்கு 16 அவுன்ஸ் சாக இருக்கும். ஆனால் தங்கமோ எப்போதும் 'ரோய்' (Troy) நிறுவையில் அளக்கப்படும். ரோய் முறைப்படி ஒரு றாத்தலுக்கு 12 அவுன்சே இருக்கும்.

நிலையை ஏற்படுத்தலாம். அதிகரித்த விளைவினால் நாடு நன்மை பெறுவதுடன் பகுத்தறிவிற்கு ஒவ்வாத சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும் அகற்றலாம். அத்துடன் அநேகமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும், செல்வந்தருக்கும் வறியோருக்குமிடையே உள்ள கசப்பு மனப்பான்மையும் ஒழியும்.

ஒவ்வொரு பிரஜைக்கும் நாட்டின் வளத்திலே தனி ஈடுபாடு ஏற்படுத்துவதே நோக்கமாக இருக்க வேண்டும்.

## இதற்கோர் வழி :

உடைமையின் விஸ்தரிப்பில் அமைந்த தேசிய வருமானத்தின் போதிய அதிகரிப்பே தேவையானதாகும்.

## உள்நாட்டு முதல் ஆக்கம் :

பொருளாதார அபிவிருத்திக்கு உள்நாட்டு முதல் ஆக்கம் அதிகரிக்கப்படவேண்டும். உள்நாட்டு முதல் உருவாக்கத்திற்கு சேமிப்பையும், உற்பத்தியையும் போதியளவு பெருக்குவதுடன் தகுந்த முதலீட்டையும் தெரிவுசெய்தல் வேண்டும். கலப்பு பொருளாதாரத்தில் உள்ளது போன்று சேமிப்பும், முதலீடும் தனியார் துறை மூலமாகவும் அரசாங்கத் துறை மூலமாகவும் ஏற்படுத்தலாம். அல்லது பொது உடைமை நாடுகளைப் போன்று அரசாங்கத்துறையில் மட்டுமே ஏற்படுத்தலாம். சேமிப்பும், முதலீடும் அரசாங்கத்துறையில் மட்டுமே இருப்பின் சனநாயகம் தோல்வியடைந்தே ஆகவேண்டும். ஏனெனில் இத்தகு சூழ்நிலையிலே மக்கள்தம், வாழ்க்கை வருவாயும், வேலை வாய்ப்புகளும், ஆட்சி செலுத்தும் அரசியல் கட்சியின் ஏகபோகக் கட்டுப்பாட்டிலே இருந்து எல்லா வெளிப்படை அரசியல் எதிர்ப்புகளையும் அழித்துவிடும். இதனால் போதியளவு தனிச்சேமிப்பும், முதலீடும் தேவையாகின்றது. எனவே சேமிப்பு — நிறுவனச் சேமிப்புகளை மட்டுமல்லாது சமுதாயத்திலுள்ள பலதர மக்கள் தம் தனிச் சேமிப்புகளையும் அடக்க வேண்டும். குறைந்த வருமானமுடைய மக்கள் தம் முதலீடுகள் போதியளவு பாதுகாப்புடையதாக மட்டுமல்லாது சேமிப்பவர் விருப்பிற்கிணங்கவும் இருக்கவேண்டும். அத்துடன் துணிவுகர முதலீடுகள் பாதுகாப்புடன் இருக்கவேண்டும்.

அறிவும், வாழ்க்கைத்தரமும் குறைந்த புதிதாக அபிவிருத்தி அடையும் நாடுகளில் குறைந்த வருமானம் எடுக்கும் மக்களிடையே தூண்டுதலற்ற சேமிப்பு போதியளவுக்கு இல்லை. ஆனதன்மையினாலே பலாத்கார சேமிப்புத் திட்டம் அவசியமாகின்றது. ஆனால் சேமிப்பாளர் தமது நிதி

நெருக்கடி நிலையிலே பணத்தை எடுக்க முடியாவிடில் பலாத்காரம் உகந்ததன்று. அதனால் சேமிப்பாளர் திரும்பிப் பெற வாய்ப்பு அளிப்பதுடன் சேமிப்புப் பலாத்காரமாகவும் இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் பணத்தைத் திரும்பப் பெறுகையில் சேமிப்பினால் ஏற்படும் இலாபங்களையும், முதலாளிகள் பங்கையும் வெளிநாட்டினர் உதவியையும் இழக்க வேண்டும். சுருங்கக் கூறின் சேமிப்பு — வருவாயின் அடிப்படையிலே தானாக இயங்குவதாக இருப்பதுடன், சேமிப்பைக் குறிப்பிட்ட காலம் வருமுன்னர் பெறுவதைத் தடுப்பதாகவும் சட்டமமைக்க வேண்டும். இத்தகைய சேமிப்புகளைச் 'சுயவிருப்புச் சேமிப்புகள்' எனலாம். உயர்ந்த வருமானம் உடையோர் இலங்கை போன்ற நாடுகளில் முற்றான பாதுகாப்புடைய துறைகளில் மட்டும் முதலிடுகின்றனரேயொழிய பொருளாதாரத்தை விஸ்தரிக்க உதவும் திட்டங்களில் முதலிட விரும்புகின்றனரில்லை. எனவே அவர்களுக்கு மட்டுமல்லாது நாட்டுக்கும் உதவக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களிலே முதலீடுசெய்வதற்கு கட்டாயப்படுத்தும் அல்லது தூண்டும் திட்டங்களை ஏற்படுத்த வேண்டும். அத்தகையவற்றில் ஒன்றே அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் முதலீடு செய்பவருக்கு வரிவிலக்கு அளிப்பதாகும். கூலி அல்லது சம்பளம் பெறுபவரையும், வரி செலுத்துவோரையும் விட மற்றைய வகையில் வருவாய் பெறுவோரையும் சேமிக்கவும் அவற்றினைத் தகுந்த முறையில் முதலீடு செய்யவும் தூண்டும் ஒரு திட்டத்தினை ஏற்படுத்தலும் விரும்பத்தக்கது. போதியளவு தூண்டுதல்களை, அரசும் அத்தகைய திட்டங்களில் அக்கறை கொண்ட வெளிநாட்டு அரசாங்கங்களும் கொடுத்தல் வேண்டும். அத்தகைய திட்டங்கள் நகரத்தில் வாழும் மக்களை மட்டுமன்று கிராமத்தில் வாழும் மக்களையும் அடக்குவதாகவிருத்தல் வேண்டும்.

## உற்பத்தி:

அதிக தொழிலாளர்களையும், குறைந்த முதலையுங்கொண்ட நாடுகட்கு முக்கியமாக உழைப்பின் அதிகரிப்பு அத்தியாவசியமானதாகும். உழைப்பு உற்பத்தியினை அதிகரிப்பதற்கு இரண்டு மாற்றுவழிகள் தான் உள. அவையாவன: தூண்டுதலும், கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தலுமாகும். சனநாயக நாட்டிலே கட்டுப்பாடோ பலாத்காரமோ இருக்க முடியாது. ஆகையினால் தூண்டுதல் முறையே கையாளப்பட வேண்டும்.

சனநாயக அரசியலின்கீழ் வேலையாட்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதோ அல்லது வேறு அத்தகைய திட்டங்களோ உற்பத்திக்கு உண்மையில் ஒரு தடையாகவே அமைகின்றது. ஏனெனில், வேலையாட்களின் பிரதிநிதிகள் இயல்பாகக் குறைந்த வேலையும் கூடிய வருவாயினையும் வேறு நன்மைகளையும் வேண்டுவர்.

சொத்துக்களின்மேல் உடமை பெற வைப்பதே மிகவும் பயனளிக்கத்தக்க தூண்டுதலாகும். தொழிலாளர்களை இத்தூண்டுதல் உற்பத்தியிலும், அரசியல் பொருளாதார உறுதியிலும் கவனம் செலுத்த வைக்கும். அத்துடன் உற்பத்திக் காரணிகளை தேசிய உடைமையாக்கும் எந்தத் திட்டமும் அல்லது நாட்டின் பொருளாதார அரசியல் உறுதியினைக் குலைக்கும் வேறெந்தத் திட்டமும் மக்கள் வெறுப்பைப் பெறத்தக்க சூழ்நிலையையும் உருவாக்கும்.

## வெளிநாட்டுதவி:

அபிவிருத்தியடையும் நாடுகளுட் பலவற்றில் உள்நாட்டு

### மீண்டும் சுயம்வரம்?

விரைவில் மாப்பிள்ளை பெண்ணுக்குச் சீதனம் கொடுக்கும வழமையோ, சுயம்வரம் நடாத்தும் வழமையோ மீண்டும் ஏற்படலாம்! இதற்குக் காரணம், பெண்கட்கு பஞ்சமேற்படலாமென ஒரு ஆராய்ச்சியாளர் அறிவித்ததே யாகும். இன்று ஒவ்வொரு 100 பெண் குழந்தைகட்கு 106 ஆண் குழந்தைகள் பிறக்கின்றன.

முதல் தட்டுப்பாடு காரணமாக அரசாங்கத்துக்கும் தனிநபர்கட்கும் போதியளவு வெளிநாட்டுக் கடனும் பொருளுதவியும் அந்நாடுகளின் விரைவான பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையாகின்றன. இதுவரை வெளிநாட்டு உதவி, அரசினர் துறைக்கு அல்லது தனியார் துறையிலுள்ள ஒரு சில முதலாளிகட்கே வழிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. இது தனியார் துறையினுள் ஆட்சியாளர் அத்துமீறிச் செல்வதற்கும், அத்துடன் சலுகை பெற்றோருக்கும், குறிப்பிட்ட தனியார் துறையினருக்கும்மேல், மக்களைப் பொருண்மை கொள்ளவும் வைக்கின்றது. இந்நிலை செல்வந்தருக்கும், வறியோருக்குமிடையேயுள்ள வேறுபாட்டினை ஒழிக்க அரசியல் பொருளாதார அதிகாரங்களைப் படிப்படியாக அரசினிலே ஒருமைப்படுத்த ஆட்சியாளரை நடவடிக்கைகளெடுக்கவைக்கும். குறைந்த வருமானம் பெறுவோரைத் தனியார் துறையினில் ஈடுபடுத்த, வெளிநாட்டுதவி அமையவேண்டும். இந்நோக்கத்திற்கு வெளிநாட்டுதவி கொடையாகவும், கடனுகவும் இருக்கலாம். அத்துடன் சர்வதேசிய கடனுதவி நிறுவனங்களும் உதவலாம்.

வெளி நாட்டுத் தனிநபர்கள் முதலீடு செய்வதற்கு இன்றியமையாத தேவை, அவர்கட்குக் கொடுக்கப்படும் போதிய பாதுகாப்பாகும். ஒரு நாட்டு அரசாங்கம் எவ்வளவு உத்தரவாதம் அளித்தபோதும் அந்நாட்டு மக்கள் வருங்காலத்தில் அவ்வுத்தரவாதத்தைப் பாதுகாப்பதாக உறுதியளிக்காவிடில் வெளிநாட்டினர் எவரும் முதலீடு செய்யத் துணியார். இவ்வாறு மக்கள் சரியாக ஒழுகவேண்டுமானல் அவர்கள் உள்நாட்டுத் தனியார்துறையில் ஈடுபட வேண்டும். ஏனெனில் உள்நாட்டுத் தனியார்துறை இல்லாதபோது வெளிநாட்டினர் முதலீடு செய்ய முற்படார். எனவே பொதுமக்கள் விரும்பக்கூடிய பரந்த தனியார்துறை அத்தியாவசியமாகின்றது.

### கூட்டுமுதல் நிறுவனம்:

கூட்டு முதல் நிறுவனம் குறிப்பாக முதலீட்டு முறை, நம்பிக்கைக்குழு முறை ஆகியவை பல வித மாற்றங்களுடன் சொத்துகளின் உடமைகளை மக்களிடையே விஸ்தரிக்க உதவும். அத்துடன் துணிவுமிக்க முதலீடுகளைப் பல விதப்பட்ட முயற்சிகளில் விஸ்தரிக்கவும் சிறந்ததாகும்.

### ஆதாய நோக்கம்:

சுதந்திர சமுதாயத்தினில் சாதாரண சூழ்நிலையிலே அதிக முயற்சியேற்படுத்த மிகவும் சிறந்த தூண்டுதல் ஆதாய நோக்கமாகும். இது சமுதாய நலன் கருதி திறம்படப் பயன்படும் வகையில் கையாளப்பட வேண்டும்.

### அரசாங்கமே வழிகாட்டி:

சனநாயக ரீதியில் கையாளப்படும் எந்தச் சேமிப்பு அல்லது முதலீட்டுத் திட்டங்களோ அல்

லது வேறு எந்தத் தேசிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களாயினும்சரி மக்களைக் கவர்வதாக இருத்தல் வேண்டும். அறிவுத்தரம் குறைந்த நாடுகளிலும் பொருளாதார அபிவிருத்திக திட்டங்களை மக்கள் அசட்டைசெய்து சோம்பேறித்தனமாக எடுத்துக் கொள்ளும் நாடுகளிலும் அரசாங்கமே திட்டங்களைத் தொடக்கி வைத்தல் வேண்டும்.

### கலப்புப் பொருளாதாரம்:

பரந்த தனியார் துறையும், நன்கு வரையறுக்கப்பட்ட அரசாங்கத்துறையும் ஒன்றையொன்று உதவுவதன்மூலம், பொருளாதார அபிவிருத்திக்கேற்ற சூழ்நிலையையும், சனநாயகத்தையும், சமுதாய நீதியினையும் பாதுகாக்கின்றது.

ஆசியநாடுகளுட் பல சனநாயக அமைப்பினுள்ளே சோஷலிச சமுதாயத்தை நிறுவுவதில் முனைந்துள்ளன. அரசாங்கம் உற்பத்திக் காரணிகள் எல்லாவற்றையும் தனது உடைமையாக்குவது சோஷலிச சமுதாயமாகாது. பொதுவுடமைக்கும தேசியமயத்துக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. உற்பத்திக் காரணிகளை அரசாங்கம் உடைமையாக வைத்திருப்பின் மக்கள் அவ் அரசாங்கத்தினையோ அல்லது அதிகாரம் செலுத்தும் அரசியல் கட்சிகளையோ கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். மேலே கூறப்பட்டுள்ள எல்லாவற்றையும் ஆராய்ந்து அவற்றிற்கான தகுந்த தீர்வுகளையும் இச்சேமிப்புவங்கி அபிவிருத்தித் திட்டம் அளிக்க முனைகின்றது. 1958-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ந் திகதி ''ஈஸ்ரேன் இக்கொணமிஸ்ற்'' (Eastern Economist) எனும் ஏடு கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது.

''இத்திட்டம் ஒரே தடவையில் பல நோக்கங்களை நிறைவேற்றுகின்றது. ஒரு நாடும் அரசாங்கமும் ஈடுபட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தில் பொதுமனிதனும் முக்கிய பங்கெடுக்க, பொருளாதாரத்தில் ஒரு உண்மையான மக்கள் துறையினை வலிமைப்படுத்துகின்றது. இனிமேலும் அரசாங்கம் உற்பத்திக் காரணிகளையும் முதலையும் உடைமையாக்குதல் சோஷலிச தத்துவத்தின் இன்றியமையாத அம்சமாகாது. இத்திட்டம் முதல் மூலதனத்தை தனிஉரிமைக் கட்டுப்பாட்டிலிருந்து தவிர்த்து உண்மைச் சனநாயக சோசலிசத்தை நிறுவ முற்படுமென்பதை எடுத்துக்காட்டுகின்றது.

சனநாயக அமைப்பினுள்ளே விரைவான பொருளாதாத அபிவிருத்தி அடைவதில் நம்பிக்கை உடைய அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு இத்திட்டம் மிகவும்

## பிரேதத்திலிருந்து இரத்தம்



ருஷிய நாட்டு ஒரு நிறுவனத்தில் மட்டும் 3000 பைன்ற் இரத்தம் இறந்தவரிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இருதய நோயினாலோ தற்கொலை செய்தோ, விபத்துக்குள்ளாகியோ இறந்தவரிலிருந்தே இவ்விரத்தம் எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஒருவர் இறந்தபின் ஆறு மணித்தியாலத்துள் கழுத்து நரம்பு மூலம் எடுக்கப்பட்ட இரத்தம் பெரும் பயனளித்துள்ளதாய் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஒரு நிமிடத்துக்கு ஒரு கார் திருட்டு



1964-ம் ஆண்டு அமெரிக்காவில் 400,000த்துக்கு அதிகமான மோட்டார் வண்டிகள் திருடப்பட்டன - அவற்றுள் பொலிஸ் படையினர் மோட்டார் வண்டியுமொன்றாகும். நாளொன்றுக்கு 1000 மோட்டார் வண்டிகள் அதாவது ஒரு நிமிடத்துக்கு ஒரு கார் வீதம் களவெடுக்கப்பட்டன. ஆனால் இவற்றுள் 90 வீதம் பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டன.

முக்கியமானதும், அவசியமானதுமாகும். எனவே இச்சேமிப்புவங்கி அபிவிருத்தித் திட்டம் இந்நாடுகளினது உடனடிக் கவனத்திற்கு எடுக்கப்படல் வேண்டும்.

## பகுதி 2

### அபிவிருத்திச் சேமிப்பு வங்கித் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

★ அபிவிருத்திச் சேமிப்பு வங்கிக்கு நிர்ப்பந்தமாகவும், தன் விருப்பிற்கிணங்கவும், கூலியிலும், சம்பளத்திலுமிருந்து ஒரு பகுதி சேமிப்பாக அவரவர்கள் கணக்கில் பதியப்படும்.

★ அரசாங்கத் துறையிலும் பொதுத்துறையிலும் உள்ள முதலாளிகள் தம் விருப்பிற்கிணங்கவும் கட்டாயமாகவும் கூலியின் ஒரு பகுதியினையோ. அல்லது வருவாயின் — இலாபத்தின் ஒரு பகுதியினையோ தொழிலாளர்கள் கணக்கிற்குப் பங்காகக் கொடுப்பர்.

★ இத்திட்டம் வரிவிலக்குகளை அளித்து அவற்றினை உற்பத்தி நோக்கிற்கு உபயோகிக்க வைக்கும். அவ் வரிவிலக்குகளின் ஒரு பகுதி சேமிப்பு வங்கி அபிவிருத்தித்திட்டத்து வருவாய் குறைந்த அங்கத்தவர்கட்காக தனியார் துறையில் முதலீடு செய்யப்படும்.

★ வெளிநாட்டு உதவிகளின் ஒரு பகுதி இத்திட்டத்து வருவாய் குறைந்த அங்கத்தவரின் நலனுக்காகத் தனியார் துறையில் முதலீடு செய்யப்படும்.

★ வெவ்வேறு நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்கள் தத்தம் சேமநல மிகுதிகளை, தாம் விரும்பின் தனியார் துறையில் முதலிடு செய்வதற்காக இந் நிறுவனத்திற்கு மாற்றலாம்.

★ வெளிநாட்டின் அரசாங்கங்கள் இத்திட்டத்தில் முதலீடு செய்வதன்மூலம் ஒரு நாட்டு மக்களின் பாராட்டினையும், அன்பையும் பெறலாம் என்பதால் அவர்கள் கடனுதவியும் பொருளுதவியும் செய்வர்.

★ சிறு தோட்டக்காரரர் கூட்டு முதல் நிறுவன அமைப்பின் கீழ், தாமாக ஒன்றுசேர்ந்து நிதி, பசளை, இயந்திரம் ஆகிய நன்மைகளையும்பெற இத்திட்டம் உதவும்.

★ இவ்வபிவிருத்திச் சேமிப்புவங்கித் திட்டம் பணத்தினைச் சேமித்து துணிகர முயற்சிகளில் முதலீடு செய்யுமேயொழிய கடனாகக் கொடுக்காது.

குடும்ப பாசத்தைக் குலைத்து நிர்மூலமாக்கக் கூடிய
சக்தியும் உண்டோ?

ஆம்! என்று விடைகூற

துணிந்துள்ள ஒரே சித்திரம்!

## சினிமாஸ் அளிக்கும்

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடிக்கும்



# நீதிக்குப்பின் பாசம்

# A. R. Abdul Hameed & Bros

## NUGADUWA MILLS

P. O. BOX 3, GALLE.

*MILLERS & SHIPPERS*

*OF*

**COCONUT OIL &**

**DREPE RUBBER**

**TO ALL PARTS OF THE WORLD**

*Cables:*

**"Hameed Bros", Galle.**

*Telephone:*

**Galle 233, 234 & 235**

# அடுத்த இதழில்....?!

○ சிந்துவெளி நாகரிகத்தில் இந்து மதம்

வ. சிவசாமி
B. A. (Cey.) B. A. (Hons) (Lond)
(வரலாற்று விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக் கழகம்)

○ ஈழத்து வெளிநாட்டு செலவாணி நெருக்கடி

அ. த. பெனடிக்ற்
B. A. Hons. A. C. A.
(விரிவுரையாளர்
இலங்கைக் கணக்காளர் கழகம்)

○ சிறுகதை- தாழங்காய்

துரை. சுப்பிரமணியன்

மற்றும் பல

## ஈழச் சுடர்

நிர்வாக ஆசிரியர்:
—சிவனருள்—

ஆசிரியர் குழு:
—சிவம்—
—கரவை நடராசன்—
—யசோதன்—
—செந்தி—
—ஸ்கந்தா—

ஓவியர்:
—ஞானம்—

சந்தா விபரம்
**6 பிரதிகட்கு ரூபா 2-00.**

அலுவலகம்:
13C, எதிரிவீர அவெனியு, தெகிவலை.

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே.

*Registered as a Newspaper in Ceylon*

# ஈழச் சுடர்

சுடர் 2 | | ஒளி 2


ஆசிரியர் குறிப்பு 3

அறிவுக் களஞ்சியம் ... ... பசோதன் 4

ஒன்றே ஒன்று ... ... பெனடிக்ட்பாலன் 7

கவிதை ... ... கோவிந்தபிள்ளை 8

யாழின் நன்னீர் ... ... ஆறுமுகம் ...... 9

கவிதை ... ... குணரத்தினம் 11

தம்பனித்தெரு முகாம் ... ... குந்தவை 12

கவிதை ... ... மட்டுநகர்முத்தழகன் 16

காங்கேசன்துறை ... ... பொருளியல் அறிஞர் 19

கவிதை ... ... வேலல்வையூர் பொன்னையா 22

மடுப்பதி ... ... பத்திநாதன் 23

ஆறுகள் முன்னோக்கி ... ... யோகநாதன் 25

நெசவுத் தொழில் ... ... ஆனந்தக்குமாரசுவாமி 33

புதிய உலகம் ... ... நல்லை அமிழ்தன் 38




பொது மக்களுக்கு

## ஒரு முதலீட்டு வங்கி

வி. யோகநாதன்

பொது நிர்வாகி — இலங்கை வங்கி

13 C. எதிர்வீர அவெனியூ, தெஹிவலையில் வசிக்கும் நா. திருநாவுக்கரசு அவர்களால் 194 ஏ, பண்டாரநாயக்க வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது